வார இதழ்.
மு. கருணாநிதி.
2 அணா

முரசு 2 | சென்னை | 2—9—55 | வெள்ளி | ஒலி 23

## சக்கரவர்த்தியின் திருமகன்

மூக்காஜி

# வீழ்ந்தான் வீர வாலி!

ராமன் வகுத்த திட்டப்படி, சுக்ரீவன் வாலியிடம் போர் புரிந்து தோற்று ஓடிவந்தான். வாலியும், சுக்ரீவனும் ஒரே மாதிரியாக இருந்ததால், யார் என்று அடையாளம் கண்டு பிடித்து மறைந்திருந்து கொல்ல முடியவில்லை—அதனால் சுக்ரீவனை அடையாளம் காண ஒரு மாலையை அணிவித்து, ராமன், வாலியிடம் மீண்டும் போருக்கு அனுப்புகிறான். அண்ணன் தம்பிக்குள் சண்டை நடக்கும்போது, தான் மறைந்திருந்து வாலியைக் கொல்வதாகவும் வாக்களிக்கிறான். அதன் படியே சுக்ரீவன் வாலியை போருக்கு அழைக்கிறான். வாலியும் புறப்படுகிறான்.

அப்போது அவன் மனைவி தாரை தடுத்து, "சுக்ரீவன் ராமனுடைய உதவி பெற்று வந்திருக்கிறான் — அதனால் போர் வேண்டாம்" என்கிறாள். வாலியோ "எதிரியின் அழைப்பை வீரன் புறக்கணிக்க மாட்டான்" என்கிறான். இதை ஆச்சாரியாரே குறிப்பிடுகிறார், 'கல்கி'யில்!

எவ்வளவு சக்தி வாய்ந்த வீரன் வாலி! அதுவும் ராமனுக்கு எந்தவிதமான நேரிட்ட விரோதமும் இல்லாதவன். நேரடி விரோதம் இல்லாவிட்டாலும், அக்கிரமமாகவாவது நடந்தானா என்றால்; அதுவும் இல்லை! ஆச்சாரியாரே சொல்கிறார், 'வாலி செய்ததும் குற்றமில்லை; சுக்ரீவன் செய்ததும் குற்றமில்லை' என்று! இந்த நிலையில் இருவரையும் சமாதானம் செய்துவைக்க முயற்சித்திருக்க வேண்டிய ராமன், மாவீரன் வாலியை மறைந்திருந்து தாக்க போர்முறை வகுக்கிறான் என்றால், எவ்வளவு கேவலமானகோழைத்தனமது! அண்ணன் ஒழிந்தால் அரசு கிடைக்குமென ஏங்கிக் கிடந்த சகோதரத் துரோகி ஒருவனுக்கு இந்த சக்கரவர்த்தியின் திருமகன் துணை போகிறானாம்! இந்தத் தீய ராமனைப்பற்றி தூய வாலி என்ன நினைத்திருக்கிறான்—என்பதை ஆச்சாரியாரே விளக்குகிறார், படியுங்கள்!

தாரை கூறுகிறாள்; "நாதா! ராமன் துணை பெற்ற சுக்ரீவனோடு போர் வேண்டாம்" என்று! அப்போது வாலி பதில் சொல்லுகிறான்—என்ன?

—"தாரா! நீ ராமனைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்! அவன் தர்மத்தை அறிந்தவன். பாபத்துக்குப் பயந்தவன். அவன் அநியாய காரியத்தில் இறங்க மாட்டான்."

(20—3—55—'கல்கி')

ராமனைப்பற்றி, வாலி இப்படியெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறான். இத்தகைய மதிப்பு பெற்ற ராமன், வாலியிடம் சமாதானத் தூதுவனாக வந்திருந்தால் வாலி கேட்டிருக்கவா மாட்டான்? அதைவிட்டு, வாலி நினைத்தது தவறு என்ற விதத்திலே, தர்மத்தைக் கொல்லும் கொடியவனாக - அநியாயத்தை அணைக்கும் அற்பப் பதராக— ராமன் நடந்து கொண்டிருக்கிறானே; இதைப் பார்த்து ராம பக்தர்கள் தலை குனிய வேண்டாமா?

வீரன் வாலியை வீழ்த்திட மறைந்திருந்து பாணம் தொடுத்தானாமே; மானமற்ற வம்சத்தின் குலவிளக்கு! கோதண்டராமன்! கோழை! கோழை! கோழை! தமிழகம் காறி உமிழ்கிறது அவன் முகத்திலே! தென்னகத்துப் புறநானூறு

★ தொடர்ச்சி 4-ம் பக்கம்

## "மன்மத பாணம்!"



இந்தியைக் கட்டாயப்படுத்தவில்லையென்று கூறிக்கொண்டே, இந்தியின்மீது தென்னாட்டாருக்கு மோகம் பிறந்திட வேண்டுமென வடநாட்டு மூலவர்கள் செய்திடும் முயற்சிகளை—'சங்கர்ஸ் வீக்லி' இந்த வகையில் கேலி செய்து, உண்மையை விளக்குகிறது!

●●● சர்வாதிகார சலாசர்!... மலர்ந்து வரும் புது யுகத்தின் தன்மை தெரியாத புல்லன்!... இருந்தும் ஓநாயிடம் உபதேசம் செய்யலாமா? கொடும் புலியிடம் கொல்லாமை விரதம் பற்றி வாய் கிழயக் கத்தி என்ன பயன்?...

# பாலம் போட முடியாத பள்ளம் — அவர்தான் பண்டித நேரு!

கோவாவிலே கொலை ...க்கிறதா? நடக்கட்டும். இந் ...ப் பிரஜைகளை இரக்கமின்றி ...ட்டுத் தள்ளட்டும். நான் ...தான வழியில்தான் பிரச்சி ...க்கு முடிவு காண்பேன் — ...படி 'காந்தீயக் கூச்சல்' ...டுகிருர் பிரதமர் நேரு!

சமாதான முறையிலே ...க்கு நம்பிக்கையுண்டு— ...மைதியான சத்யாக்கிரகத் ...த மதிப்பளிப்பதைப் ...லவே, நாமும் சாந்தி மார்க் ...தை விரும்புகிறோம்; வர ...ற்கிறோம்!

போர்ச்சுக்கல் நாட்டின் சர் ...திகார சலாசர் போர் வெறி ...ண்டவன்; மலர்ந்து வரும் ... யுகத்தின் தன்மை தெரி ...த புல்லன் — புரிகிறது. ...க்கு!

இருந்தும் ஓநாயிடம் உப ...ம் செய்யலாமா? கொடும் ...யிடம் கொல்லாமை விர ...தைப் பற்றி வாய் கிழியக் ...தினால் என்ன பயன் கிடைக் ...? —இதுதான் இந்த உப ...டத்திலே கோவாவைப் ...றி நேருவுக்கு எதிராக நிற் ... இடதுசாரி அணியிலே ...ார்க்கப்பட்டிருக்கும் முத் ...ன கருத்துக்கள்!

நேருவின் கொள்கையிலே ...டான நம்பிக்கையின்மை ...த் தெரிவிக்கும்-அறிவிக்கும் ...துறிதான் பம்பாய் போன்ற ...ரங்களிலே உருவான கொந் ...ப்புகளாகும்!

இப்போது எதிர்ப்பு வேகம் ... உச்ச கட்டத்தை அடைந் ...க்கிறது!

...ஹைதராபாத்மீது போலீஸ் ...வடிக்கை எடுத்தீர்! இமயத் ... அடிவாரத்திலே காஷ் ...ச் சமவெளியிலே இராணுவ ...வடிக்கை தொடுத்தீர்! அப் ...தெல்லாம் சமாதான வழி ...லே செல்லத் தவறிவிட்டு, ...போது கோவாவுக்கு மட் ... சமாதான வழியைத் தேர்ந் ...டுப்பானேன்? — இப்படி ...டெங்கும் எழுந்த கோஷத் ...லே இப்போது புது: உணர்ச் ...ம் சேர்ந்திருக்கிறது!


உலகப் போர் — என்னும் 'துரியோதனுதிகளை' அழிப்ப தற்கு, நேரு பஞ்சசீலம் என்னும் 'பஞ்சபாண்டவ'க் கொள்கைகளைத் தயாரித்திருக்கிருர்.

சமாதானத்திலே எல்லோருக்கும் அக்கறை உண்டு! போர் வேண்டுமென்று கூறுபவர்கள் உலகப் போக்கை உணராதவர்களாகத்தான் இருக்க முடியும்!

நேரு கோவா விஷயத்திலே சமாதான வழியிலேதான் செல்ல வேண்டுமென்கிருர். பொறுத்தால் பூமியாளலாமென்று பேரிகை (வாய்ப் பேரிகைதான்!) தட்டுகிருர் — இதுதான் இப்போதைய நிலைமை!

அப்படியானல் நேரு கோவாவிலிருந்து அன்னிய ஏகாதிபத்தியத்தை விரட்டுவதற்கு எடுத்துக்கொண்டிருக்கும் 'சமாதான நடவடிக்கைகள்'தான் என்ன? கணக்கு காட்ட முடியுமா காந்தீய பக்தர்கள்?

காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் கட்சி ரீதியாக போர்க் குரல் கொடுத்து கோவா சத்



யாக்கிரகக் களத்திலே குதித்தார்களா?

— இல்லை! தேவையில்லையென்று சொல்லிவிட்டார் தேபர்ஜி!

சத்யாக்கிரகம் சமாதான வழி என்பதை யாரும் மறுக்க முடியாது. துன்மார்க்க நெறியிலே ஈடு இணையற்று விளங்கும் எந்த சர்வாதிகாரப் பித்தன் கூட சத்யாக்கிரகம் சாந்தி மார்க்கம் என்றுதான் சொல்லுவான்!

இருந்தும் காங்கிரஸ் கட்சியினர்-கைராட்டை பொறித்த கொடியுடையோர்—கோவாவிலே சத்யாக்கிரகம் வேண்டாமென்று முடிவு செய்து விட்டனர்!

சத்தியாக்கிரகம் வேண்டாமென்றவர்கள் பின்னர் எந்த 'சமாதான முறை'யைத்தான் தேர்ந்தெடுத்திருக்கின்றனர்? தெரியுமா உங்களுக்கு?

பொருளாதார முற்றுகையாம்! —இதுதான் சமாதான முறையா? சியாங்கே ஷேக் பார்மோசா தீவிலிருந்து கொண்டு செஞ்சினத்தின் மீது பொருளாதார முற்றுகை போடப் போவதாக 'பயமுறுத்தி'க் கொண்டிருந்தது நினைவிருக்கலாம். அப்படியானல் இதுவும் சமாதான முறையாகுமா?

—மோதிலால் மைந்தரின் கோவாக் கொள்கையை கொம்புத்தேன் என்று சொல்பவர்கள் இது பற்றி யோசிக்க வேண்டும்!

பம்பாயிலிருந்து வெளிவரும் 'கரண்ட்' பத்திரிகையின் ஆசிரியர் காரகா இன்னுமொரு முக்கியமான கேள்வியொன்றைக் கிளப்பியிருக்கிருர்.

நேரு ரஷ்யாவுக்குச் சென்ருர்; புல்கானினுடன் உரையாடினுர். ஏன்? பொழுது போக்கவா? —காங்கிரஸ்காரர்கள் ஒத்துக் கொண்டாலும் கூட அருமை கம்யூனிஸ்ட் தோழர்கள் ஒருக்காலும் ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள்!

சமாதானம் பேசத்தான் சென்ருர் என்று பத்திரிகைகளிலே படித்திருக்கிறோம்!

நேரு யூகோஸ்லேவியாவுக்கும் சென்ருர்; டிட்டோவோடு விருந்து சாப்பிட்டார்! —விருந்தின் போதுகூட அவர் வெறும் பேச்சு பேசவில்லையாம் -பஞ்சசீலப் பிரகடனத்தில் கையெழுத்துப் பெற்றிருக்கிருர்!

பின்னர் நேரு இத்தாலிக்குச் சென்ருர்; போப்பாண்டவரைக் கண்டார்; கோவாப் பிரச்சினை மதப் பிரச்சினை அல்லவென்று அவரிடமிருந்து உறுதி பெற்ருர்.



சலசலப்பு - சலாசர்

இவ்வளவு நாடுகளுக்கும் சென்றுவிட்டு—கடைசியில் இங்கிலாந்துக்கும் சென்று, இனிக்க இனிக்க சமாதானத்தைப் பற்றி பேசிவிட்டு தாயகம் திரும்பியவர்—உண்மையிலேயே அவருக்கு சமாதான நெறியிலே நம்பிக்கை இருக்குமானல்—ஏன் போர்ச்சுக்கல் சென்றிருக்கக் கூடாது?

—'கரண்ட்' பத்திரிகை எழுப்பியிருக்கும் கேள்வி இதுதான்!

போப்பாண்டவரைத் தரிசித்துப் பேசியவர் போர்ச்சுகல் நாட்டின் பிரதமர் சலாசரையும் சந்தித்து—சமாதான வழியின் பெருமைகளைப் பற்றிப் பேசியிருக்கலாமே!

புல்கானினையும், அய்சன் ஹோவரையும் சேர்த்து வைக்க முயலுபவர்—ஜெனிவா மாநாட்டின் பக்க பலம் என்று புகழப்படுபவர்—தான் போகாவிட்டாலும் தன் தூதுவர் கிருஷ்ண மேனனையாவது சலாசரிடம் அனுப்பியிருக்கலாமே!

—இதை ஏன் அவர் செய்திருக்கக் கூடாது?

உண்மை இதுதான்— நேரு செயல் மன்னனல்ல; சொற் கூட்டத்தின் அடிமை!

தெளிவுள்ள கொள்கை பேசி, அதன்படி நடக்கும் சிங்க ஏறு அல்ல—வாய் வீச்சிலே வீரர்! வெறும் பேச்சிலே விற்பன்னர்!

சொல்—செயல்; அதற்கு இடையிலே பாலம் போட்டு இணைக்க முடியாத பள்ளம்—இதுதான் நேரு!

— தாசானுதாசர்களே! மீண்டுமொரு முறை சிந்தித்து தெளிவு பெறுங்கள் — நேருவின் கோவாக் கொள்கை பற்றி!

★

# தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 2—9—55 வெள்ளி

## நகராட்சித் தேர்தல்கள்.

நகராண்மைக் கழகத் தேர்தல்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. சென்னையிலே செப்டம்பர் திங்களிலும், மற்ற நகரங்களிலே அக்டோபர் திங்களிலும் தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன.

வழக்கம் போல் காங்கிரஸ் கட்சி, தேர்தலில் கட்சி சார்பிலே போட்டியிடுகிறது. இல்லை; இல்லை; அந்தப் போர்வையிலே போலி தேச பக்தர்கள் பலா அபேட்சகர் வேடங்கட்டி ஆடப் போகிறார்கள்.

பழைய காங்கிரஸ்வாதி—புதிய காங்கிரஸ்வாதி—பணிபுரிந்தவர்—பதவிக்காக வந்தவா எல்லாம் சேர்ந்த கலப்படக் கட்சியாகிவிட்ட காங்கிரஸ், தனது காளை மாட்டுச் சின்னத்தோடு தேர்தல் களத்திலே இறங்கிவிட்டது. நேருவின் தென்னாட்டு சுற்றுப் பயணமும் நகர சபைத் தேர்தலுக்கெனவே அமைகிறது எனலாம்.

'காங்கிரசை எதிர்க்கும்போது கூட்டணி முறையைத்தான் கடைப் பிடிக்க வேண்டும்; இல்லாவிட்டால், ஓட்டுகள் பிரிந்துவிடுகின்றன—ஆகவே, கூட்டணி அமைப்போம் வாரீர்'—என்று சில ஆண்டுகளாக சிம்மக்குரல் எழுப்பி வந்த செங்கொடிக்காரர்கள், இந்த நகரசபைத் தேர்தல்களிலே கூட்டணியில் சேராமல், கம்யூனிஸ்டுகள் தனியாகப் போட்டியிட வேண்டுமென்று கிளைச் சங்கங்களுக்கு உத்திரவு பிறப்பித்திருப்பதாகத் தெரியவருகிறது. இந்த மாறுதல், 'இந்தியாவின் மாணிக்கம்' இரஷ்யா சென்று வந்த பிறகு ஏற்பட்ட விளைவாகக்கூட இருக்கலாம் என்று விஷயம் தெரிந்த வட்டாரங்களில் யூகிக்கப்படுகின்றன.

திராவிடர் கழக தினசரி "விடுதலை" (24-8-55) தனது தலையங்கத்தின் மூலம், கட்சி சார்பில் நகர சபைத் தேர்தல்களில் போட்டியிடுவது தேவையில்லையென்றும், காங்கிரஸ்காரர்களிலும் நல்லவர்கள் இருக்கிறார்கள்—அதுபோல காங்கிரசின் எதிர்க்கட்சிகளிலும் யோக்கியர் அல்லாதவர்கள் இருக்கிறார்கள் என்றும், திராவிட கழக லேபிளைப் பின் பக்கமாக ஒட்டிக் கொண்டு தேர்தலில் போட்டியிடுபவர்களையும் நாணயம் என்ற உரை கல்லில் உரைத்துப் பார்க்க வேண்டியது அவசியமென்றும் குறிப்பிட்டுவிட்டு, வரப்போகும் நகரசபைத் தேர்தல்களில் கட்சி லேபிளை கவனித்து ஓட்டளித்திடக் கூடாதென்றும் குறிப்பிட்டிருக்கிறது. நகரசபைத் தேர்தல்களில் கட்சி சார்பில் போட்டியிடுவது கூடாதென்றும், அப்படிப் போட்டியிடுபவரை ஆதரித்தல் ஆகாதென்றும், திராவிடர் கழகத்திலிருந்தே நாம் கூறிவந்திருக்கிறோம். இப்போதும் அதையே கூறிடுகிறோம். தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அவர்கள், 13-8-55-ல் வெளியிட்டுள்ள அறிக்கையில், நகரசபைத் தேர்தல்களில் நமது தோழர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறை பற்றி விளக்கப்பட்டிருக்கிறது.

### அறிக்கை

தி. மு. கழகத்தைச் சார்ந்தவர்கள், கழகத்திற்கும் கழகக் கொள்கைகளுக்கும் களங்கம் ஏற்படாத வகையில், தனிப்பட்ட முறையில் வேண்டுமானால் நகரசபைத் தேர்தலில் போட்டியிடலாம்.

தி. மு. கழகத்தின் மூலாதாரக் கொள்கைகளைப் பொறுத்து மாறுபட்ட கருத்துடைய எந்த அரசியல் கட்சியோடும் தி. மு. கழகத் தோழர்கள் இணைந்து நின்றோ அல்லது கூட்டாகச் சேர்ந்தோ தேர்தலில் போட்டியிடக் கூடாது.

கட்சி ஆதிக்கத்தை எதிர்க்கக் கூட்டணி எங்கேயாவது அவசியப் படுமாயின், போட்டியிடும் தி. மு. கழகத் தோழர்கள், போதுமான விளக்கம் தந்து, அதற்கான தலைமைக் கழகத்தின் அனுமதியைப் பெறலாம். கூட்டணி, தனிப்பட்ட முறையில் போட்டியிடுபவர்களின் கூட்டணியாக இருக்க வேண்டுமே ஒழிய, கட்சிகளின் கூட்டணியாக இருக்கக் கூடாது.

எந்தத் தி. மு. கழகக் கிளையும், 'தேர்தலில் யாருக்கு வாக்கு அளிப்பது' என்று முடிவு எடுக்கக்கூடாது. வாக்கு அளிப்பது என்பது, அவரவர்களின் தனிப்பட்ட விருப்பத்திற்கு விடப்பட வேண்டிய தொன்றாகும். பொதுவாக, கட்சியின் பெயரால் போட்டியிடுபவர்களுக்கு ஆக்கந் தர வேண்டாம்.

★

நகர சபைகள், அந்தந்த நகரத்து மக்களின் நலன்களைக் கவனிப்பதற்காக அமைகின்றனவே தவிர, கட்சிகளின் பெயரால் கொள்கைகளை, திட்டங்களை வரையறுக்க அமைவன அல்ல என்பதைப் புரிந்துகொண்டால், நகராட்சிக்குக் கட்சிப் போர்வை தேவையில்லையென்ற தத்துவத்தை சுலபமாக உணர முடியும்.

காங்கிரஸ் கட்சி, வரப்போகும் பொதுத் தேர்தலுக்கு ஒரு உரைகல்லாக இந்த நகரசபைத் தேர்தல்களைப் பயன்படுத்தப் பார்க்கிறது. இதிலே பலப் பரிட்சை பார்த்துக்கொண்டு, பொதுத் தேர்தல் எனும் 'ஹோதா'விலே இறங்க தன்னைத் தயார் செய்துகொள்ளும்.

அதனால்தான் வெற்றிக்கு வாய்ப்புள்ளவர்கள் யாராயிருந்தாலும்—அவர்கள் வெத்துவேட்டு தேசபக்தர்களாயிருந்தாலும்; கவலையில்லை—காங்கிரஸ் வெற்றி என்ற கித்தாப்பு கிடைத்தால் போதும் என்று கருதுகிறது.

இந்த சூட்சமத்தை உணர்ந்துகொண்டுதான் சில சுயநலப் புலிகள்—சென்ற தடவை சில்க் ஜிப்பாவுடன் ஓட்டுப் பிச்சை கேட்டவர்கள், இந்த ஆண்டு, 'ஜெய்ஹிந்த்' ரிப்பனைக் குத்திக்கொண்டு ஓட்டு வேட்டையாடக் கிளம்பியிருக்கிறார்கள். இத்தகைய பச்சைப் பதவிப் பித்தர்களுக்கு பாடம் போதிக்க மக்கள் மன்றம் தவறியதே இல்லை. இன்றில்லாவிட்டால் நாளை அந்த வீழ்ச்சியை அணைத்துக் கொண்டுதான் தீரவேண்டும், திடீர் தேச பக்தர்கள்!

நாட்டிலே நகராட்சி மன்றத் தேர்தல்கள் எப்படி யெப்படி நடைபெறுகின்றன என்று நமக்குத் தெரியும். சிலபல இடங்களிலே, குறிப்பிட்ட ஓரிரு பணக்காரர்களே நகரசபைத் தலைவர்களாக மாறி மாறி வருகிறார்கள். மக்கள் தொண்டர்கள், அத்தகையோருக்கு உழைத்து உழைத்து உருக்குலைந்து போவதுதான் மிச்சம்! இன்னும் சில நகர்களில், இரு சீமான்கள் தங்கள் பலப் பரிட்சையைப் பார்த்துக்கொள்வர். தேர்தல் முடிந்ததும் சீமான்கள் கைகோர்த்து உலவுவார்கள். சீமான்களின் படை வரிசையிலே இருந்தவர்கள், தேர்தல் முடிந்தும் பகைவர்களாகவே காட்சி அளித்துக்கொண்டிருப்பார்கள். இத்தகைய பண முதலைகளின் ஆதிக்கமும், நகர சபைகளில் ஒழிக்கப்பட்டாக வேண்டும். எப்படி, காங்கிரஸ் போன்ற கட்சிகளின் ஆதிக்கம் நகராட்சி மன்றங்களில் இருத்தல் கூடாதோ: அதுபோலவே, பணத் திமிங்கிலங்களின் ஆதிக்கமும் கூடாது என்கிறோம்.

"தேர்தலுக்கு செலவு செய்ய பணம் வேண்டாமா? பணக்காரர் பக்கபலம் இருந்தால்தானே முடிகிறது!"—இப்படிப் பேசுவோரும் உண்டு! பார்க்கிறோம்; அப்படிப்பட்ட பணம் வேண்டாம்-பணமில்லாமலே தேர்தலில் பாட்டாளிகள் நிற்கட்டும்; பலமுறை தோற்கட்டும்; கவலையில்லை; தோல்வி தொடர் கதையாகவே இருந்துவிடாது! ஏனெனில் தொடர் கதைக்குக்கூட முடிவு உண்டு. தோல்விக்கும் முடிவு உண்டு!

நகர மன்றங்களில், ஆடம்பரப் பிரியர்களும், ஐஸ்வரியக் கொழுப்பு கொண்டவர்களும் அமர்வதால், நகருக்கான சீர்திருத்தம் நிச்சயம் நடைபெறாது. மக்கள்பால் அன்புகொண்ட ஊழியர்கள்—செல்வச் செருக்கற்றவர்கள்—பாட்டாளிகள்—உண்மைப் பொதுநலவாதிகள்தான் நகர் மன்றங்களில் அமரத் தகுதியுள்ளவர்கள்.

கட்சிக்காரர்—கனம்—என்பதற்காக கடமை மறவாமல், கர்ம வீரர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, அவர்களை நகர்க் காவலர்களாக அமைத்துக்கொள்ளும் நல்ல வாய்ப்பை இழந்துவிடக் கூடாதென்று ஒவ்வொரு நகர மக்களையும் வேண்டிக்கொள்கிறோம். தேர்தல்களில், எத்தகைய கட்டுப்பாட்டோடும், கடமை உணர்ச்சியோடும் கழகத் தோழர்கள் நடந்துகொள்ள வேண்டுமென்பதற்கும் பொதுச்செயலாளர் அறிக்கையை மீண்டும் ஒருமுறை ஞாபகப் படுத்துகிறோம்.

## தோழர்கட்கு முக்கிய அறிவிப்பு.

கண் நோய்க்குப் பிறகு டாக்டர்களின் கண்டிப்பான எச்சரிக்கையின்படி நீண்டநாள் ஓய்வுக்குப் பின் சென்னையில் மாநில மாநாட்டு நிதிக்காக, வரும் செப் 4-ந் தேதி ஒரு கூட்டத்தில் கலந்து கொள்கிறேன். மாநில மாநாட்டு நிதி என்பதாலும், வெளியூர் இன்றி சென்னையில் மட்டும் என்பதாலுமே இந்தக் கூட்டம் ஒத்துக் கொண்டுள்ளேன். வெளியூர்ப் பயணங்கள் கூடாது என்று இன்னும் டாக்டர் வலியுறுத்தி வருகிறார். கண் விழித்தல்—அதிக நேரம் உரையாடுதல்—இவைகள் மீண்டும் தொந்திரவு அளிக்கக் கூடும் என்றும் கூறுகிறார். ஆகவே இன்னும் சில மாதங்களுக்காவது வேறு கூட்டங்களில் கலந்து கொள்ளாமல் இருக்கவும், ரயில் பிரயாணங்களை தவிர்க்கவுமான நிலைமையில் இருக்கிறேன். தயவு செய்து தோழர்கள் பொருத்தருள வேண்டுகிறேன். கடிதம் எழுதியுள்ள நண்பர்களுக்கும் இதையே என் பதிலாகவும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,
மு. கருணாநிதி.

# மகாவிஷ்ணு அம்சமுமல்ல;
# ★ அந்தோ; அவன் மாவீரனுமல்ல! ★

## சக்கரவர்த்தியின் திருமகன்....

★ 1-ம் பக்கத் தொடர்ச்சி

*சிரிக்கிறது; சீதாமணுளனின் 'சின்னத்தனம்' கண்டு!*

*ஆருயிர் மனைவியிடம் விடை பெற்று போர்முரசு தட்டிப் புறப்படும் வாலி, அவளிடம் என்ன சொல்லி விட்டுப் புறப்படுகிருன்?*

"சுக்ரீவனை நான் கோல்மொட்டேன்; அவன் கர்வத்தை அடக்கிவிடுவேன்; அவ்வளவே! பயப்பட வேண்டாம்-மங்கல மொழி சொல்லி என்னை அனுப்பு! தடுக்க வேண்டாம்!" என்கிருன்.

(20-3-55—'கல்கி')

*தம்பியைக் கொல்லக்கூடாது என்ற எண்ணத்தோடு, புத்தி புகட்டி அனுப்ப வருகிருன் போர்முனை பல கண்ட புலி! ஆனுல் தம்பியோ, அண்ணனை சாய்க்க அன்னியன் உதவியோடு வந்து நிற்கிருன், அரண்மனை வாசலிலே!*

*வாலி சுக்ரீவன் போர் மூண்டது. சுக்ரீவன் சுருண்டு விழப் போகும் நேரம்—வாலி, வெற்றிக் கொடி பறக்கவிடும் வேளை! அதுகண்ட ராமன் மறைந்து நின்று-'கொல்லும் பாண'த்தை வாலி மீது ஏவினுன்.*

—"அது நேராகச் சென்று வாலியின் வைரமான மார்பை ஆச்சாமரத்தைத் துளைத்த படியே துளைத்துவிட்டது!... விழா முடிந்ததும் அதற்கான துவஜஸ்தம்பம் கீழே கிடப்பது போல, ரத்தம் பெருக வாலியின் உடல் கீழே விழுந்தது"

(20—3—55—'கல்கி')

*வீரன் வீழ்ந்தான்! கோழை ராமனை சுக்ரீவன் வணங்கினுன். வீழ்ந்த வாலி, தன்னை மறைந்திருந்து தாக்கியது யார் என்று பார்த்தான். ராம லக்ஷ்மணர்களைக் கண்டான். எப்படியிருந்திருக்கும் அவனுக்கு? இதோ, வாலியே பேசுகிருன்; கேளுங்கள்—ஆச்சாரியார் எழுதியிருக்கிறபடி......*

"ராமனே! தசரத சக்கரவர்த்தியின் புத்திரனுவாய். உத்தம குலத்தில் பிறந்த நீ, பெரும் புகழும் அடைந்த நீ, ஏன் இப்படிச் செய்தாய்? உன் நற்குணங்களும் ஒழுக்கமும் உலகம் அறிந்த விஷயம். இப்படியிருக்க நான் வேறொருவனிடம் யுத்தம் செய்துகொண்டு அதில் மனம் முற்றிலும் செலுத்திவந்த சமயத்தில் என் கண்களுக்குத் தென்படாமல் மறைந்து நின்று என் மேல் பாணம் விட்டு என்னைக் கொன்ருய். உன்னைப் பற்றி ஜனங்கள் சொல்லும் புகழ் மொழிகளுக்கு இது முற்றிலும் விரோதமாயிருக்கிறதே! எல்லாப் பிராணிகளிடமும் கருணை கொண்டவன், தோஷ எண்ணங்களுக்கு இடம் கொடுக்காமல் புலன்களையும் உள்ளத்தையும் அடக்கியாள்பவன், அற வழியில் நிற்பவன், பொறுமை, சாந்தி, தருமம், சத்திய பராக்கிரமம் முதலிய உத்தம குணங்களை எல்லாம் பெற்றவன் என்று கீர்த்தி பெற்ருயே. இப்போது அவையெல்லாம் என்னவாயிற்று? என்னைக் கொன்று நீ என்ன லாபம் பெறுவாய்? யோசிக்காமல் இந்த அதரும காரியம் செய்தாய். என் மனைவி உன்னைப் பற்றி என்னை எச்சரித்தாள். அவள் பேச்சைத் தட்டி விட்டு வந்தேன். நீ வேஷதாரி என்றும், துன்மார்க்கன் என்றும், புல்லால் மூடப்பட்ட பாழுங்கிணறு போன்ற பாவி என்றும் தெரியாமல், மனைவியின் பேச்சைச் கேளாமல், நான் என் தம்பியுடன் யுத்தத்துக்கு வந்தேன். உனக்கு என்ன தீமை நான் செய்தேன்? உன்னுடன் யுத்தம் செய்யவா நான் வந்தேன்? அதருமத்தில் இறங்கி என்னை மறைந்து நின்று கொன்ருய். நல்ல அரச குலத்தில் பிறந்து பெரும் பாவத்தைச் செய்தாய். நிரபராதியைக் கொன்ருய். நீ அரச பதவிக்குத் தகுந்தவனல்ல. மோசக்காரனுன உன்னை பூதேவி மணக்க விரும்ப மாட்டாள். நீ எப்படி தசரதனுக்கு மகனுகப் பிறந்தாய்? தர்மத்தை விட்டு நீங்கின நீசனுல் கொல்லப் பட்டேன். என் கண்ணுக்கு முன் நின்று நீ யுத்தம் செய்திருந்தாயேல் இன்றே நீ செத்திருப்பாய். என்னை நீ வேண்டிக் கொண்டிருந்தால் ஒரே நாளில் சீதையை உன்னிடம் அழைத்து வந்து விட்டிருப்பேனே! சுக்ரீவனுக்காக என்னைக் கொன்ருயே; ராவணனைக் கொன்று பிரேதத்தைக் கழுத்தில் கயிறு போட்டுக் கட்டி உன்னிடம் இழுத்துக் கொண்டு வந்து விட்டிருப்பேனே! மைதிலியை எவ்விடம் மறைத்து வைத்திருந்தாலும் கண்டு பிடித்து உன்னிடம் ஒப்புவித்திருப்பேனே! பிறந்தவர்கள் இறப்பது விதி. ஆயினும் நீ முறை தவறி என்னைக் கொன்ருய். உன் குற்றம் பெருங் குற்றம்."

இவ்வாறு தேவேந்திர குமாரனுன வாலி மரணுவஸ்தையில் ராமனைக் கண்டித்தான்.

வாலியின் இந்தக் குற்றச் சாட்டுக்கு ராமன் என்ன பதில் சொல்ல முடியும்? ஏதோ சொன்னதாகவும், அதைக் கேட்டு வாலி சமாதானப்பட்டதாகவும் வால்மீகி ராமாயணத்தில் சொல்லப்படுகிறது. அதில் சாரம் இல்லை என்று விட்டு விட்டேன். பெரியோர்கள் மன்னிப்பார்கள். ராமாவதாரத்தில் ஆண்டவனும் தேவியும் சகிக்க வேண்டிய துக்கங்களில் இந்தத் தவறும் பழியும் ஒன்று."

(20—3—55 --'கல்கி')

*ஆச்சாரியாராலேயே, ராமனுக்கு ஏற்பட்ட பழியை மூடி மறைக்க முடியவில்லை; மழுப்புகிருர்! அவதார புருஷன் எனப் படுபவன், சாதாரண மனித உள்ளங் கூடப் படைக்காத சராசரி மனிதனை விடக் கீழாக நடந்து கொண்டிருக்கிருன்—ஆச்சாரியாரின் சாணக்கிய முறைகளாலும் கழுவ முடியாத களங்கத்தைப் படைத்த கயவனுக்குக் கோயிலாம்! திருவிழாவாம்! கொண்டாட்டமாம்! ராம நவமியாம்! வெட்கம்! வீரர்களின் இருதயத்திலே வேல்கொண்டு தாக்கும் சம்பவம்! அறவோர் அதிர்ச்சி கொள்ளும் நிகழ்ச்சி! அந்த நிகழ்ச்சிக்கு மூலவர்களாக விளங்கும் ராம லக்ஷ்மணர்கள் போற்றப்பட வேண்டிய வீரர்கள்தானு? ஆச்சாரியாரே!* ஆரம்பக் கட்டுரையில், "ராமன் கடவுள் அவதாரமல்ல; ஒரு மாவீரன்-அவ்வளவே" என்று *கதைத்தீரே; அந்த மாவீரன்—மானம் போகும் வகையில் அல்லவா நடந்து கொண்டிருக்கிருன்! மன்னிக்கக் கூடிய குற்றந்தானு உமது மாவீரன் செய்தது? சொல்லுங்கள் ஆச்சாரியாரே; பதில் சொல்லுங்கள்!*

(தொடரும்)

---

பழைய நிகழ்ச்சி

## சர்வ கட்சிக் கூட்டங்களில், கம்யூனிஸ்டுகள்!


புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்குப் பண முடிப்பு வழங்கி பொன்னுடை போர்த்திய நிகழ்ச்சி, பெருந் திருவிழாபோல் சென்னையில் நடைபெற்றது. எல்லாக் கட்சியினரும் கலந்து கவிஞரை வாழ்த்தினர். அப்போது பேசிய தோழர் ஜீவானந்தம் அவர்கள், "பாரதிதாசன் தொழிலாளரைப் பற்றிப் பாடவில்லை" என்று குறிப்பிட்டார். அடுத்துப் பேசிய தோழர் நெடுஞ்செழியன் அவர்கள்—தொழிலாளர் பற்றி கவிஞர் எழுதிக் குவித்துள்ள கவிதைகளைக் கடல் மடை திறந்தாற் போல் எடுத்துரைத்தார். வெள்ளம்போல் தமிழர்கூட்டம் என்ருரே, சேதுப்பிள்ளை-அந்தத் தமிழர் கூட்டம் ஜீவாவின் ஜீவனற்ற முகம் கண்டு சிரித்துச் சென்றது.

★

ஸ்டாலின் மறைவுக்காக சென்னை கடற்கரையில் சர்வ கட்சிக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. தோழர் ராமமூர்த்தி அவர்களே நேரில் வந்து அழைத்தமைக்கிணங்க அண்ணு அவர்களும், கருணுநிதியும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். முதலில் தோழர் ம. பொ. சி. பேசினுர். பிறகு செங்கல்வராயன், பின் ஜீவா, பின் குத்தூசி குருசாமி, பின் கருணுநிதி பேசினர். அடுத்து யாரைப் பேச வைப்பது என்பது பற்றி ராமமூர்த்திக்கும் ஜீவாவுக்கும் மேடையிலேயே தகராறு!

'அண்ணுத்துரை பேசட்டும்' என்ருர் ராமமூர்த்தி—'அய்யோ; அவர் பேசிவிட்டால் கூட்டமே கலைந்துவிடும்—அவர் இறுதியாகப் பேசட்டும்' என்ருர் ஜீவா! ராமமூர்த்தி 'நான் கடைசியில் பேசவேண்டும்; அதனுல் சி. என். ஏ. பேசட்டும் முதலில்! அவர் பேசியதும் ஒரு நூறு பேர் போகலாம்—மற்றவர் என்னுரைக்காக காத்திருப்பார்கள்' என்ருர்! பிறகு ஜீவா, அண்ணுவிடம் 'நீங்கள் இப்போதே பேசிவிடுங்கள்' என்ருர். அண்ணு, 'கடைசியில் பேசுகிறேனே' என்ருர். ராமமூர்த்தி-ஜீவா உரையாடலைக் கவனித்திருந்த கருணுநிதி, அண்ணுவிடம், "நீங்கள் இப்போதே பேசிவிடுங்கள் அண்ணு!" என்ருர். கருணுநிதி கூறியதின் பொருளைப் புரிந்துகொண்ட அண்ணுவும் பேச எழுந்தார். பேசினுர்.

ஸ்டாலினை மக்கள் முன்னே நிறுத்திப் பேசவைத்தார்! 'சர்வகட்சிகளையும் ஒன்று சேர்க்கக்கூடிய சக்தி-ஸ்டாலின் சவத்திற்கே இருக்கிறதென்ருல்-உயிரோடிருந்த ஸ்டாலின் சக்தி எத்தகையது என எண்ணிப்பாரீர்!' என முழங்கினுர். அண்ணு பேச்சு முடிந்தது-கடற்கரை காலியானது! ராமமூர்த்தியும் ஜீவாவும் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டு விழித்தனர். "அப்போதே சொன்னேனே; கேட்டீரா?" என்ருர் ஜீவா! பிறகு ராமமூர்த்தியும், ஜனங்களுமாக சில நிமிஷ நேரம் பேசினுர்கள். கூட்டம் முடிக்காமலே முடிந்தது!




வீரத்தையும், வெடிமருந்தையும் துணையாகக் கொண்டு வெற்றி மாலை சூடிக்கொண்டவன்—

தன்னம்பிக்கை ஒன்றினாலேயே தரணி பல கொண்டவன்—

அணி மலர்ச் சோலையிலே உலவி, உல்லாச வாழ்வை நுகர நேரமில்லாமல், பிணக்காட்டிலே, குருதி மணத்தை நுகர்ந்தபடியே குதிரை மீது சுற்றியவன்—

அந்த ஒப்பற்ற இளஞ்சிங்கம் நெப்போலியனை பெர்னாட்ஷா 'கர்மவீரன்' என்கிறார்.

பிரிட்டனின் முதல்வர் வின்ஸ்டன் சர்ச்சில் அவனுடைய உருவச் சிலையை தன்னுடைய மேஜைமீது வைத்திருக்கிறார்!

நெஞ்சுஉரம் ஒன்றினாலேயே நீள் வையத்தை வென்றிட நினைத்தான்! முயற்சியினால் முழுநிலவாகப் பிரகாசித்தான்!

ஆனால் அவன் வாழ்க்கை ஏடுகளோ வஞ்சியினாரின்முன் புயலில் பஞ்சாகிவிட்ட கதையைச் செப்புகின்றன!

அந்தக் 'கர்மவீரன்' ஜோசப்பைன் என்னும் காரிகை ஒருத்தியால் பம்பரம்போல் சுழன்ற கதையை முன்பே எழுதியிருக்கிறோம்!



கோவை உதடு—குமுதக் கண்கள்—சாவை வெல்லும் சக்தி நிறைப் பார்வை...
—அவள்தான் டேசிரி கிளேரி!

நெப்போலியன் ஜோசப்பைனை சந்தித்து ஜோடிப்புறாக்களாக மாறுவதற்கு முன்னமேயே அவன் வாழ்க்கையிலே ஒரு வானவில் தோன்றி வர்ண ஜாலம் காட்டி மறைந்திருக்கிறது.

அப்போது நெப்போலியனுக்கு வயது இருபத்து நான்கு இருக்கும். காந்தம்போல் கண்டவரைக் கௌவிக் கொள்ளும் கார்சிக நாட்டுக் கண்கள்! கவர்ச்சியான மூக்கு! ஓவியக் கலைஞன் கல்லிலே கடைந்து வைத்தது போன்ற எடுப்பான உதடுகள்!

வாலிபம், வனப்பு இவைகளின் கூட்டாக இருந்தான்!

அவன் ஐரோப்பாக் கண்டத்தையே ஆட்டி வைக்கப் போகும் பூகம்பம்—என்பது யாருக்கும் தெரியாது! பெருந்தீ சிறு பொறியாக உருவாகிக் கொண்டிருக்கும் நேரம்! சூறாவளி, சக்தியைச் சேர்த்துக் கொண்டிருந்த சமயம்!

நெப்போலியன் பிரான்சின் சர்வாதிகாரியல்ல — சாமான்ய சிப்பாய்த் தலைவன்; இதயத்துச் சந்துகளிலே மனிதருள் மாணிக்கமாய்—மாணிக்கங்களுள் மணிமுடியாய் மாற வேண்டுமென்ற இறுமாப்பை இலட்சியமாகச் சேர்த்து வைத்திருந்த இராணுவ வீரன்!

கர்மவீரனாயிருந்தாலென்ன? வானத்துக் கதிரவனாய்த்தான் இருக்கட்டுமே; குளக்கரையின் சேற்றிலே தூங்கும் கமல மலருக்குக் கதிரைத் தூதனுப்பி காதலுரை வழங்குவதில்லையா?

டேசிரி கிளேரி — என்னும் பதினைந்து வயதுப் பாவை; கோவை உதடும், குமுதக் கண்களும், சாவை வெல்லும் சக்தி நிறைப் பார்வையும் கொண்ட பூங்கொடியாள் அந்தப் பட்டாள வீரனின் கண்ணில் பட்டாள் — பட்டது அவன் உறுதி! சாய்ந்துவிட்டான் அந்த சரசியின் மடியில்! தனது சர்வாதிகாரப் பிடியிலே பிரான்சைச் சாய்த்தவன் வாலிபம் என்னும் சர்வாதிகாரியின் வலையிலே சிக்கி, வெள்ளத்தில் வீழ்ந்த வெல்லமானான்!

மார்சேல்ஸ் நகரத்திலே அவர்கள் திருமணம் செய்துகொண்டு வாழ்க்கைத் தேனைச் சுவைப்பதென்று 'நிச்சயதார்த்தம்' செய்துகொண்டார்கள்!

நெப்போலியன் சாதாரண சிப்பாய்தானே! வருங்காலத்தை வென்று வருவதற்காக வனிதாமனியை மார்சேல்சில் விட்டுவிட்டு பாரிசுக்குச் சென்றான், இராணுவ விருதுகளைப் பெற்று அவளை இராணியாக்கிக் கொள்ளலாமென்ற நினைப்பில்!

வாழ்க்கையிலே அவன் எதிர்பார்த்த உயர்வுகள் அந்தநேரம் அவனுக்குக் கிடைக்கவில்லை. ஏணியின் அடுத்த படியிலே கால் வைக்க முடியாத காலத்தில் நெப்போலியன் டெசிரிக்குக் கடிதமெழுதினான் — 'கண்ணின் மணியே! பாரிஸ் நகருக்குப் புறப்பட்டு வந்துவிடு; திருமணம் புரிந்து கொள்ளலாம்' என்று!

தித்திப்பான பதில்தான் எதிர்பார்த்தான். அவளோ பதில் எழுதவில்லை; பாரா முகமாக இருந்து விட்டாள்!

கடைசியில் செய்தி வந்தது —சிந்தை குளிப்பாட்டும் செய்தி அல்ல! சித்தப் வெடித்துச் சுக்கு நூறாகும் செய்தி—டெசிரி ஸ்வீடன் நாட்டு சக்கரவர்த்தியின் பட்டமகிஷியாகப் போகிறாளென்ற பரபரப்பான செய்தி!

தனக்கு மதிப்பளிக்காத பிரான்சுநாட்டின் தெருக்களில் பிச்சைக்காரனைப் போல சுற்றிக்கொண்டிருந்த வேளையிலே தான் அவன் இந்த சோகச் சுமையையும் தாங்க வேண்டியவனானான்!

நெப்போலியன் வாள் பிடிக்கத் தெரிந்த வீரன் மட்டுமல்ல; உணர்ச்சி கொப்பளித்தெழுந்தால் அவன் எழுத்தாணியையும் பிடிப்பான். இருதயத்துப் பாரங்களை இலக்கிய ரசம் ததும்ப ஏடுகளில் கொட்டிக் குவிப்பான்!

பன்னிரண்டு பெரிய பக்கங்களிலே டெசிரியின் நெறியும் புருவத்தைப் பற்றியும், நேரிடையைப் பற்றியும், அவள் தனக்குச் செய்த நேசம் மறந்த துரோகத்தைப் பற்றியும், அவன் கிறுக்கித் தள்ளி விட்டான்.

அந்த ஏடுகள் உன்னதமான நவீன மென்கிறார்கள்! நூற்றாண்டுகளுக்கு ஒருமுறை தோன்றும் வீராதி வீரர்களும், விவேக சிந்தாமணிகளும் மனிதர்கள்தான்—சாதாரண மனித உணர்ச்சிக்கு அடிமைப் பட்டவர்கள்தான்—என்பதை உறுதிப்படுத்தும் உன்னதப் படப்பிடிப்பு என்று புகழ்மாலை சூடுகிறார்கள்!

போர் முனைக்குச் செல்லும் போதும் நெப்போலியன் அந்தப் பன்னிரண்டு பக்கக் காதல் பாசுரத்தைக் கூடவே எடுத்துச் செல்வானாம்! இறுதியில், செயின்ட் ஹெலினா தீவிற்~~ நாடோடியாக அந்த நாடாண்டவன் துரத்தப்பட்ட போதும் பெரு மூச்சால் அவன் எழுதிய 'புத்தகம்' அவன் அருகில் தான் இருந்ததாம்!

அந்த வீரனின் இறுதி மூச்சு காற்றிலே கலந்தபோது அந்த பன்னிரண்டு பக்கங்களில் எட்டு பக்கங்கள் அவனுக்கு சிகிச்சை செய்த மருத்துவனிடம் சிக்கியது. அதை அந்த மருத்துவன் போலந்து நாட்டு பிரபு ஒருவனிடம் நல்ல விலைக்கு விற்றுவிட்டான். இப்போது அந்த எட்டுப் பக்கங்களும் போலந்தின் ஐஸ்வரியமாகக் காட்சி அளிக்கிறது!

மீதமுள்ள நான்கு பக்கங்கள் இந்த ஆண்டுதான் கிடைத்தன. சென்ற மார்ச் திங்கள் 15-ம் தேதியன்று நியூயார்க் நகரத்தின் ஆண்ரேடி காப்பெட் என்பவரின் சொத்துகள் ஏலத்துக்கு வந்தன. அதிலே நெப்போலியன் தீட்டிய அந்த நான்கு பக்கங்களும் கலந்திருந்தன. போலந்திலே இருக்கும் பிரதியின் தொடர்ச்சி இந்தப் பிரதியோடு பொருந்தி வருகிறதாம்!

ஹோவார்டு சாமுவேல் என்பவர் அந்த நான்கு பக்கங்களையும் இரண்டாயிரம் பவுன்கள் விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்.



...காந்தம்போல் கண்டவரைக் கௌவிக் கொள்ளும் கார்சிக நாட்டுக் கண்கள்-கவர்ச்சியான மூக்கு - வாலிபம், வனப்பு இவைகளின் கூட்டு...
அவன்தான் நெப்போலியன்!

நெப்போலியனின் நெஞ்சு புழுவாய்த் துவண்ட அந்தப் பொல்லாத நேரம் அந்த ஏடுகளிலே சிரஞ்சீவி வரம்பெற்று வாழ்கிறது.

குதிரையின் கடிவாளத்தையும், பீரங்கிக் குழல்களையுமே தொட்டு வாழ்ந்த கரங்களில் இறகுப் பேனாவைக் கொடுத்து எழுத்தாளனாக்கிய அந்த 'நேரம்' நம் நினைவிற்குரியது!

—மாறன் எம். ஏ.

# புதையல்

மு. கருணாநிதி

38

## குடுகுடுப்பைக்காரன்!

முன் இதழில்....

[வெள்ளியம்பலத்தின் வீட்டுக்குள்ளே அடைபட்டு வேதனைப்படும் துரையின் எதிரே ஜன்னல் பக்கமாக ஒரு பெண்வந்து நிற்கிருள். துரை, 'யார்?' என்று கேட்டுக்கொண்டே அவள் பக்கம்செல்கிருன்.]

இளமை சுமந்து ஒரு எழிலாள் நின்று கொண்டிருந்தாள். அவளது முகத்திலே அமைதியின் சாயல் இல்லை. ஏதோ ஒன்றை எதிர் நோக்கும் ஏக்கம் கலந்த ஆவலின் ரேகைகள் படர்ந்திருந்தன. அவளது கண்கள் சிவப்பேறியிருந்தன. இரவெல்லாம் தூங்காமலிருந்திருக்க வேண்டும் அவள். அதோடு, ஆழ்ந்த சிந்தனையிலும் அவள் ஈடுபட்டிருந்திருக்க வேண்டும். அவள் ஏன் அங்கு வந்து நிற்கிருள்? தன்னை வேடிக்கை பார்க்க வந்திருக்கிருளா?–என்ற ஆத்திரம் நிறைந்த கேள்விகள் துரையின் நெஞ்சத்தைத் துளைத்தெடுத்தன.

"யாரம்மா நீ?" என்று கேட்டான், சினத்தையும் சீற்றத்தையும் விழுங்கிக் கொண்டு!

"இந்த வீடுதான்!"என்று மெதுவாகப் பதில் கூறினுள் அவள்.

"வெள்ளியம்பலத்திற்கு நீ...?" என்று இழுத்தாற்போல் கேட்டான் துரை.

"நீங்கள்தான் சொல்லுங்களேன்; அவருக்கு நான் என்ன வேண்டுமென்று!"-இது அவள்.

"ம" என்று மீண்டும் பேச்சை இழுத்தான்.

"ம" சரிதான்! அடுத்த எழுத்து என்ன வென்று சொல்லுங்கள்; பார்க்கலாம்" என்ருள் அவள்.

"க" என்ருன்.

"இல்லை-"கா" என்ருள்!

"ம"–"கா"—துரைக்கு சந்தேகம் வந்து விட்டது.

"ஆமாம் — ம—கா—ரா—ணி" என்று முத்தாய்ப்பு வைத்து ஒரு பெருமூச்சும் விட்டாள் அவள்!

"மகாராணி என்ருல் பெயரா?— அல்லது...?" என்று ஐயத்தை வளர்த்துக் காட்டினுன் அவன்.

"பெயரல்ல!மகாராணியேதான்! இரண்டாம் தாரம்!" என்று விளக்கினுள். துரை, மௌனமாக இருந்தான்.

"ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்? பெயர் என்ன என்று கேட்கவில்லையே; ஏன்?" என்று அவள் பேச்சைத் தொடர ஆரம்பித்தாள்.

துரை, ஒரு அசட்டுப் புன்னகையை மட்டும் பதிலாகத் தந்துவிட்டு சும்மாயிருந்தான்.

"பாவம்—உங்களைப் பார்க்கும் போது பரிதாபமாயிருக்கிறது. எங்கே, இப்படி கையை நீட்டுங்கள்—அவிழ்த்து விடுகிறேன்." என்று, அவள் தன் கைகளை ஜன்னலுக்கு உட்பக்கமாக நீட்டினுள். துரையும் தன் கைகளை அவள் பக்கமாக நீட்ட, அவள் அவனது கட்டுகளை அவிழ்த்து விட்டாள். வெகு நேரமாகக் கட்டப்பட்டு வலியெடுத்துப் போயிருந்த கைகளை உதறிக் கொண்டு துரை சிறிது மனநிம்மதிபெற்ருன்.

அந்த நிம்மதி, ஒரு விநாடிகூட நீடிக்க முடியவில்லை. அம்பலத்தின் திட்டங்கள் எப்படியெப்படி இருக்குமோ, என்ற அச்சம் அவனை முற்றுகையிட்டுக் குழப்பியது.

அவனது மனம் எங்கேயோ சுற்றி அலைகிறது என்பதைப் புரிந்து கொண்ட அவள், அவனைப் பார்த்து, "உங்களுக்கு ஏன் இப்படி ஏற்பட்டது?" என்று கவலையோடு கேட்டாள்.

"என்னம்மா, என்னைக் கேக்கிறே?...உன் புருஷன் சொல்லாமலா இருந்திருப்பார்..."

"அவர் என்னிடம் சொல்லவில்லையே!"

"ஒருவேளை...இளம் பெண்ணிடம் இரகசியம் சொல்லக்கூடாது என்று இருந்திருப்பார்!"

"நான் என்ன இளம் பெண்ணு? நீங்கள் அப்படியாநினைக்கிறிங்க?"

"நினைக்கிறதா?......பார்த்தாலே தெரியுதே; அதனுல்தான் சொன்னேன்."

"பார்த்தாலே என் பருவம் தெரிகிறதா? பருவம் மட்டுந்தான் தெரிகிறதா? பருவத்தின் துடிப்புகளும் தெரிகிறதா?"

அவளது பேச்சின் போக்கு, துரைக்கு பயத்தை உண்டாக்கி விட்டது. வெள்ளியம்பலத்தின் தந்திரங்களில் இதுவும் ஒன்றுபோலும் என எண்ணிவிட்டான். ரசவல்லியை அனுப்பி, அவள் மூலமாக புதையல் ரகசியத்தைப்பெற திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறதாக்கும் என எண்ணினுன்.

"அம்மா...கொஞ்சம் நான் தனியாக இருக்க விரும்புகிறேன். நீ போய்ட்டு வாம்மா!" என்று அறையின் வேறு மூலைக்குத் திரும்பினுன் துரை.

"என்ன; அம்மா, அம்மா என்று கூப்பிடுகிறீர்கள்...என் பெயர் மேனகா!"

"இருக்கட்டும், அதனுல் என்ன?—" என்று துரை அவள் கண்ணில் படாதபடி வேறுபக்கம் சென்ருன். அவளும் அதை விட்டுப் போய் விட்டாள். துரையின் உள்ளத்திலே தீர்க்க முடியாத குழப்பங்கள் ஒன்றன்பின் ஒன்ருக உருவெடுத்தன. "யார் இவள்? இவள் ஏன் என் கட்டுகளை அவிழ்த்துவிட வேண்டும்?... அம்பலத்திற்கு மனைவியாக வாய்த்தவள் என் மீது அனுதாபங் காட்ட வேண்டிய காரணம் என்ன? இதுவும் சூழ்ச்சிதானு? அல்லது காலத்தால் சூறையாடப்படும் இளமைக்கு இரை தேடக் காத்திருந்து, இதுதான் சமயம் என முடிவு கட்டிக்கொண்டாளா?"— பசியின் வேதனைகூட தெரியவில்லை; அவ்வளவு பெரிய புதிராக வந்து சேர்ந்தாள் மேனகா, அவனுக்கு!

ஜன்னல் பக்கம் நிழலாட்டம் இல்லையென்பதைத் தெரிந்து, அவள் போய்விட்டாள் என்று புரிந்துகொண்டு, அங்கே வந்து நின்ருன் துரை. வெள்ளியம்பலம், விட்டுத் திண்ணைப் பக்கத்திலே யாரோ ஆட்களோடு உரக்கப் பேசிக்கொண்டிருப்பது அவன் காதில் விழுந்தது. என்ன பேசுகிருர் என்று கவனித்தான். புரியவில்லை. அப்போது அவசர அவசரமாக மேனகா ஜன்னலண்டை வந்தாள். தன் கையிலுள்ள ஒரு பொட்டலத்தை ஜன்னலுக்குள் போட்டுவிட்டு "பத்திரம் – பத்திரம்!" என்று கூறிவிட்டு மறைந்து விட்டாள்.

வியப்பில் சிக்குண்ட துரை, அதை எடுத்துப் பிரித்தான். இட்லிகள்! பெருமூச்சுவிட்டுக் கொண்டே அவைகளை சாப்பிட ஆரம்பித்தான். மீண்டும் வந்தாள். ஒரு சிறு குவளையில் தண்ணீரை ஜன்னல் கம்பிகளின் இடுக்கு வழியே உள்ளே வைத்து விட்டுப் போய்விட்டாள்.

துரை விழித்தான். எப்படியோ, எண்ண அலைகளின் மோதுதலுக்கிடையே காலை உணவை ஒருவாறு முடித்துக்கொண்டு, களைப்போடு கீழே படுத்தான். கதவு திறக்கும் ஒலி கேட்டது. துரை, ஆவலோடு எழுந்தான். கதவு திறக்கப்பட்டது. வேலைக்கார ராமனும், ஒரு முரடனும் வந்தார்கள் உள்ளே!

"அய்யா உத்திரவு – பல் துலக்குவதற்காக பத்து நிமிஷம் வெளியே வரலாம்!" என்ருன் ராமன்.

"பல் துலக்கத் தேவையில்லை!" என்று கூறினுன் துரை.

"அதெல்லாம் முடியாது - துலக்கித்தான் தீரவேண்டும்." என்று கட்டளையிட்டான் ராமன்.

துரையும் அவனேடு வெளியே வந்தான். தோட்டத்துப் பக்கம் சிறையிலே வார்டர்கள் நிற்பது போல முரடர்கள் கையிலே கம்புடன் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள். வார்டர்களின் பாதுகாப்பின் கீழே, கொலைக் குற்றக் கைதிகள், தங்களது கடன்களை முடித்துக்கொள்வது போலவே, துரையும் முடித்துக் கொண்டான்.

ஒரு சிறிய கிராமம்—இங்கே இப்படி ஒரு காட்டு ராஜாவின் தர்பார் நடக்கிறது—என்று தனக்குத்தானே நினைத்து நெருப்பாக மாறி நின்ருன் துரை.

மீண்டும், துரை பூட்டப்பட்டான். சிறைக் கைதிகளுக்குத் தருவது போலவே, ஒரு குவளை கஞ்சியை ஜன்னல் வழியாக வைத்து விட்டு ராமன் நடையைக் கட்டினுன். துரை, அந்தக் கஞ்சியை கையில் எடுத்துப் பார்த்து தனக்குள்ளாக சிரித்துக் கொண

"எழுவானுக்கும் தொழுவானுக்கும் இடையிலே...
காக்கை மூக்கு நிழலிலே...
கள்வர் புகும் வழியிலே...
கண்டாலும் 'கம்மாளர்' கண்ணிலே...
எழுபது கோடி பசும்பொன்... "

டான். அப்போது அவள் கை உள்ளே நுழைந்தது. ஒரு பீங்கான் கோப்பை!— அவள் மறைந்து விட்டாள். சூடான டீ!— துரை, அந்தத் தேநீரை சுவைத்தான். அவன் பட்ட வேதனைகளுக்கு அந்த சூடான தேநீர் மட்டும்தான் ஆறுதல் வழங்கியது. சூடான தேநீர்! சுவையாக இருந்தது: ஆனால் அந்த சூட்சமம் புரிய வில்லையே அவனுக்கு! யோசித்தான்; யோசித்தான். முடிவுகாண முடியவில்லை. அப்போது அவள் வந்தாள். பீங்கான் கோப்பை, குவளை முதலியவை ஜன்னல் பக்கம் இருந்தன. அவைகளை எடுத்துக்கொண்டு, அவனையும் ஒரு முறை கூர்மையாகப் பார்த்து விட்டு மளமள வென்று போய் விட்டாள்.

அவளுக்கு எதிரே அம்பலம் வந்தார். "என்ன மேனகா!" என்று கேட்டுக் கொண்டே அவளோடு திரும்பி அவரும் தொடர்ந்தார். அங்குள்ள ஒரு மேடையிலே குவளைகளை வைத்து விட்டு, அவள் அவரது தோள் களைத் தழுவினாள். அவர் அவள் கைகளை தன் முரட்டுக் கரங் களால் அமுக்கினார்.

"அய்யோ! அய்யோ!" என்று அலறி அவள் கைகளை விடுவித்துக் கொண்டாள்.

"அப்பாடா! சிவந்து விட்டது போங்கள்!" என்று சிணுங்கினாள்.

"சீ! போ நாயே!— இதுக்கு அழுது கிட்டு!" என்று முதுகில் ஒரு தட்டுத் தட்டினார். அவளோ வில்லாக வளைந்தாள், அந்த அடியி லிருந்து தப்புவதற்காக.— "சூ! என்ன இது முரட்டுத்தனம்!" என்று ஊடல் புரிந்தாள்.

"அடக் கழுதை! என்ன பிகுவு பண்ணுதுடா இந்த நாயி!" என்று கொஞ்சிக் கொண்டே அவள் கன்னத்தைக் கிள்ளினார் அம்பலம்.

"அய்யோ, கையோட சதையை எடுத்துடாதிங்க!" என்று கத்தினாள் அவள்.

"பெரிய கொய்யாப்பழமாக்கும் கிள்ளின சதை வர?" என்று கிண்டல் செய்தார் அவர்!

அவள் ஒரு ஆழமான மூச்சு விட்டு நின்றாள். அந்தப் பெருமூச் சிலேதான் எத்தனை எத்தனை எண்ணங்கள்!

அவள், அம்பலத்திற்கு மனைவி யாகி மூன்று வருடங்கள் முடியப் போகின்றன.

"மேனகாவுக்கு என்னடி; எவ னாவது இந்திரன் கிடைக்காமலா இருப்பான்?"—இப்படி ஊரார் பேசிக் கொண்டிருக்கும்போது அவளும் உள்ளுக்குள் மகிழ்வாள். திருத்துறைப்பூண்டி அவள் சொந்த ஊர். நடுத்தரமான குடும் பத்தைச் சேர்ந்தவள். நாலு பேரைப் போல நமது பெண்ணும் படிக்க வேண்டுமென்று அவள் பெற்றோர் ஆசைப் பட்டனர். அவளும் படித்தாள். படிப்பும் முடிந்தது. மாப்பிள்ளை தேடும் படலம் ஆரம்பமாயிற்று. மருங்கப் பள்ளம் கிராமத்திலே சொந்தக் கார மாப்பிள்ளை ஒருவன்; அவ னும் படித்தவன். அவனைக் கல்யாணம் செய்து கொள்வதிலே மேனகாவுக்கும்கூட ஆசைதான்.

திருமணம் நிச்சயமாயிற்று. மருங்கப்பள்ளத்திலே மாப்பிள்ளை வீட்டிலே திருமணம். முதல் நாள் பெண் அழைப்பு. காலையிலே திருமணம். இரவு பெண் வீட்டா ருக்கும், மாப்பிள்ளை வீட்டாருக் கும் பெரிய தகராறு! போடுவதாக வாக்களித்த நகைகளை மாப்பிள்ளை வீட்டார் போடவில்லை. அதன் காரணமாக மேனகாவின் தந்தை சச்சரவை வளர்க்க ஆரம்பித்தார். பேச்சு முற்றி, இருதரப்பாருக்கும் கை கலக்கிற நிலைமை ஏற்பட்டு விட்டது. மேனகாவின் தந்தை ஆத்திரக்காரர். மாப்பிள்ளையின் தந்தையை அடித்து விட்டார். தந்தை தாக்கப் பட்டதை மாப் பிள்ளையால் சகிக்க முடியவில்லை. மாமனார்மீது பாய்ந்து விட்டான். மாமனாரும் மாப்பிள்ளையென்று பார்க்காமல் அவன் கழுத்தை நெறித்துக் கொன்று விட்டார். கொலை விழுந்த பிறகு கலகம் அடங்கி விட்டது......

வெள்ளியம்பலம் அந்த நேரத் தில் குறுக்கிட்டார். மேனகாவின் தகப்பனாரை தூக்குமேடையிலி ருந்து காப்பாற்றுவதா யிருந்தால், தனக்கு மேனகாவைத் திருமணம் செய்துவைக்க வேண்டுமென்று நிபந்தனை விதித்தார். கொலை செய் யும் வரையிலே, தனக்காகக் காத் திருக்கும் தூக்குமேடையைப் பற்றி நினைத்துப் பார்க்காத மேன காவின் தந்தை, இப்போது அஞ்சி நடுங்க ஆரம்பித்தார்! அப்பாவைக் காப்பாற்றித் தீரவேண்டிய பொறுப்பு, தன் தலையில் விழுந்து விட்டதை மேனகா உணர்ந்தாள். வெள்ளியம்பலம்—மேனகா விவா கம் உடனடியாக நிச்சயிக்கப் பட்டது. மாப்பிள்ளை இறந்தது கொலையல்ல; தற்கொலை யென்று பஞ்சாயத்தார் முடிவு செய்தனர். மாப்பிள்ளை வீட்டாரும் வெள்ளி யம்பலத்தின் பயமுறுத்தலுக்கு அடங்கி ஒடுங்கிப் புழுங்கிக் கிடந்தார்கள்.

மேனகா, அம்பலத்தின் மனைவி யானாள். அதுமுதல் 'கழுதை' 'நாய்' என்ற காதல் வர்ணனைகளை அவள் காதுகள் கேட்கத் தவற வில்லை. அவள் பள்ளியிலே படித் திருக்கிறாள், தமிழ் இலக்கியங்கள்! 'நிலவே! தேனே! மலரே! மணியே! அன்பே! உயிரே! அருமருந்தே!'— இப்படியெல்லாம் காதல் யாழை மீட்டும் காதலர்களை சந்தித்திருக்கி றாள், காவிய ஏடுகளில்!

ஏட்டில் கண்ட எழிலோவியம்— வீட்டு வாழ்விலும் காணலாம் என அவள் கட்டிய கோட்டைகள் ஏராளம்!

ஆனால், சந்தர்ப்பம் ரோஜா மலரை இரும்புக் கரங்களில் ஒப்பு வித்து விட்டது! செந்தாமரைக் குளத்திலே காட்டெருமை விளை யாடும் சூழ்நிலை எப்படியோ திடீரென அமைந்து விட்டது!

மேனகா, திருமணமான சில மாதம் வரையில்—தந்தைக்காக தான் செய்த தியாகத்தை எண்ணி பெருமைப் பட்டாள். பிறகோ, அவளது மென்மை நிறைந்த பருவத்தின் படையெடுப்பு பல மாகி விட்டது.

முதுமையும் முரட்டுத்தனமும் கொண்ட முள்வேலிக்குள்ளே, எங்கோ ஒரு மூலையில் பறிப்பா ரின்றி வாடும் முல்லைக் கொடியாக அவள் கிடந்தாள். நாய்; கழுதை;— வாடி; போடி—இப்படி வார்த் தைகளைக் கேட்பதையே அவ ளால் தாங்கிக் கொள்ள முடிய வில்லை. தென்றலை விரும்பினாள்— நானும் காற்றுத்தானே; என்று புயல் அடித்துக் கொண்டிருக்கி றது அவள் வாழ்விலே!

இந்த நிலையிலேதான் துரை கொண்டு வரப்பட்டான். அம்ப லம், புதையலைத் தேடி என்ன வெல்லாமோ செய்கிறார் என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். அவருக்கு அந்தப் புதையல் கிடைப்பதற்கு முன்—தான் தேடி வாடிய புதையல் தனக்குக் கிடைத்து விட்டதாக அவள் கருதினாள்.

"கன்னம் என்ன கொய்யாப் பழமோ?" என்று கேட்கும் வெள்ளியம்பலத்தின் வரட்டுக் குரலுக்கும், "தித்திக்கும் தேன் கரும்பே! கொய்யாக் கன்னம் கொடு!...கோவை இதழ் தந்திடு!- கோமளமே! நான் பதிலுக்கு பத்தாயிரம் முத்தாரம் தந்திடுகி றேன்!" என்று தழுவிடும் வாலிபத் தின் முழக்கத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டை மேனகா எண்ணி யெண்ணி ஏங்கிய காலத் திற்கு முற்றுப்புள்ளி வைக்கப் பட்டதாக அவள் உறுதி கொண் டாள். "துரை, ஆணழகன்! அவன் என் விடுதலைக்கு சம்மதித்தால், நான் அவன் விடுதலைக்கு சம்மதிப் பேன்" என்று யார் காதிலும் விழாமல் மெதுவாக—ஈனசுரத்தில் கூறிக் கொண்டாள்.

வெள்ளியம்பலம், துரை அடை பட்டிருக்கும் அறைக்கு வந்தார். ஜன்னல் பக்கம் நின்று அவனைப் பார்த்தார்.

"என்னப்பா! உண்மையைச் சொல்லப் போகிறாயா: இல்லையா? என்ன முடிவு செய்திருக்கிறாய்?" என்று கம்பீரத் தொனியிலே கேட் டார்.

"முடிவு செய்துவிட்டேன்— சாவதற்கு!" என்றான் துரை!

"யமனே வந்து, கணக்கு நோட்டைக் காட்டி, உன்னைக் கூப்பிட்டாலும் — நான் அனுப்ப மாட்டேன்; மார்க்கண்டேயனைக் காப்பாற்றிய பரமசிவனைப்போல நான் உன்னைக் காப்பாற்றுவேன்: ஏன் தெரியுமா? புதையல் எனக் குக் கிடைத்த பிறகுதான் உன் புதையல் நடைபெற வேண்டும். இந்த பார் துரை! நான் சொல் வதைக் கேள்: அந்த ரகசியத்தை என்னிடம் சொல்லிவிடு: அது எங்கேயிருக்கிறது என்று காட்டி விடு! இருவருமே பங்கு போட்டுக் கொள்வோம்!" என்று சமாதா னம் பேசினார் அவர். துரை மௌனமாக நின்றான். அப்போது தெருவிலே குடுகுடுப்பைக்கார னின் குரல் கேட்டது.

"இந்த ஊட்டு அய்யாவுக்கு நல்லகாலம் பொறக்குது!— பெரிய அதிர்ஷ்டம் வரப் போகுது! அதிர்ஷ்டம் வரப் போகுது! திடீர்னு அதிர்ஷ் டம் வரப்போகுது!"

அம்பலம், அந்த வார்த்தைகளை ஆவலோடு கேட்டார். துரையை விட்டகன்று, தெருப்பக்கம் போனார்.

"ராத்திரிகூட, விடியக்காலயில சொன்னான் சாயபு!......சுடு காட்ல உதயமானதை சொன்னான். அய்யாவைப் பாரு! மகாராஜா மாதிரியிருக் காரு! அய்யாவுக்கு திடீர்னு அடிக்கப்போவுது அதிர்ஷ் டம்-அய்யா ஒரு காரியத்துக் காக கஷ்டப்படுராரு-அதை ஒருத்தன் தட்டிக்கிட்டு போகப் பார்க்கிறான் — நடக் காது அது! அய்யாவுக்கு நல்லகாலம் பொறக்குது! ஐஸ்வர்யம் வருது! அய்யா கட்டுற ஒரு கிழிஞ்ச துணி- அம்மா தூக்கிப்போட்ட ஒரு பழைய சீலை-ஏதாச்சும் கேக் கிறான் சாயபு!...நல்லகாலம் பொறக்குது! குடு! குடு! குடு! குடு! கொடு! கொடு! கொடு! கொடுக்கிற தெய் வம் கூரையைப் பிச்சுகிட்டு- பூமியைப் பொளந்துகிட்டு கொடுக்கப் போவுது அய்யா வுக்கு!"

அம்பலத்திற்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. குடுகுடுப்பைக் காரனை உள்ளே வருமாறு கூப் பிட்டார்.

[ வளரும்]

# "திராவிடம்" உண்டா?

# கேளாக்காதினரே! கேளுங்கள்!

*"திராவிடம், திராவிடர் என்ற சொற்கள் வெறும் கற்பனைகள்—யதார்த்த வாதத்திற்குப் பொருந்ாதவை கள்" என்று மேடையிலும், ஏட்டிலும் முழக்கிடும் நண்பர் களே! இதோ* **பிரெஞ்சுப் பேராசிரியர் ஜே. பிலியோசாத்** *பேசுகிறார்; கேளுங்கள் :*

*ஆகஸ்டு 29-ம் நாள், சென்னை லயோலா கல்லூரியில் நடைபெற்ற தமிழ்க் கலை மன்ற விழாவில், சேதுப் பிள்ளை தலைமையில் பேசிய பேராசிரியர் பிலியோசாத் கீழ்க் கண்ட வாறு குறிப்பிட்டார்:*

"இந்திய இலக்கியங்கள் பற்றி தென்னிந்தியாவிலிருந்தே— அதவும் திராவிடர்கள் மூலமும், தமிழ் மலையாளம் பேசும் மக்களின் மூலமுந்தான் முதன் முதலாக ஐரோப்பா வில் அறிய முடிந்தது! தமிழ் தவிர மற்ற எல்லா இந்திய மொழிகளும் சமஸ்கிருத சார்புடையவை. ஆனால், தமிழ், அவ்வாறின்றி தன்னிறைவு கொண்டது."

—மித்திரன். ஆகஸ்ட்—30.

*இப்போது என்ன சொல்கிறீர்கள் தோழர்களே! வழக்கம்போல் திராவிடமாவது—'திராவிடமாவது'—என்ற தெளிவற்ற கூச்சல்தான் போடப் போகிறீர்களா?*

# யூகங்கள்!

கோவாவிலே நடந்த துப்பாக் ... பிரயோகத்தைக் கண்டிப்ப ...காக. ஆத்திரமடைந்த பொது ...க்கள் உகண்டா தேசத்து ...தேவராலயத்துள் புகுந்து. ...ங்கு நாட்டப்பட்டிருந்த காடியைக் கொளுத்த முயன் ...கள்.

...னே பக்கத்திலிருந்த பள் ளிக் கூடத்தின் சரித்திர ஆசிரியர் ஒரு தேசப்படத்து டன் வெளிவந்து,போர்ச்சுகல் ஐரோப்பாக் கண்டத்தில் இருப்பதையும், உகண்டா ஆசியாக் கண்டத்தில் இருப் பதையும் சுட்டிக் காட்டினு ராம். அதற்குப் பின்னர்தான் ‘ஆத்திரமடைந்த பொது மக்கள்’ ஆத்திரம் தணியப் பெற்றனராம்!

★

ராஷ்டிரபதி ராஜேந்திரபிரசாத் ...ந்த வருஷ[illegible] தீபாவளிப் ...ண்டிகையை தென்னுட்டி ...யே தங்கி கொண்டாட ...டிவு செய்திருக்கிருர்.

...வருக்காக ஸ்பெஷல் மத்தாப்புகளும், பூத்திரிக ளும் சிவகாசி தொழிற்சாலை யில் தயாரிக்க திட்டமிடப் பட்டிருக்கிறதாம்.

...மராசர் சீனத் தூதுவரின் மூலமாக மாசே துங்கைக் கலந்து, ராஜேந்திர பிரசாத் உபயோகிப்பதற்கென்று சில சீன வெடிகளுக்கு ‘ஆர்டர்’ தந்திருக்கிருராம்.

...சன்ஹோவர் ராஷ்டிரபதி விளையாடி மகிழ்வதற்காக சில அணுவெடிகளை இரவல் தரப்போகிருராம்!

★

சென்னை ஆக-27.

நேற்று சென்னை சட்டசபைக் கூட்டம் இரவு 8-30 மணி முதல் ...ள்ளிரவு 12 மணி வரை நடை பெற்றது.

...காசு உபத்திரவத்திற்கு பயந்த மெம்பர்களும், மெத்தை வசதி இல்லாதவர்களும் அன்று சட்டசபைக்கு வந்து சபை நடவடிக்கைகளில் கலந்து கொண்டனர்.

★

“இரவு எனக்கு வேலை இருக் கிறது; நான் வரமாட்டேன்”—என்று பகலில் ஆட்சேபம் தெரி வித்த மந்திரி ராமசாமிப் படை யாச்சி இரவு சட்ட சபைக் கூட்டத்துக்கு வந்திருந்தார்!

அன்றைய தினம் ஒரு இரவுப் பள்ளியைத் திறந்து வைப்ப தாக இருந்த நிகழ்ச்சி எதிர் பாராத விதமாக ‘கேன்சல்’ ஆனதால்தான் மந்திரியால் வரமுடிந்ததாகப் பேசிக் கொள்ளப்பட்டது உண்மை யாகவும் இருக்கலாம்.

★

“மெம்பர்கள் எல்லோரும் தூங்கி விழிக்கிருர்கள். காப்பி அல்லது ‘டீ’ சப்ளை செய்யக் கூடாதா?”—என்று ஒரு மெம் பர் கேட்டார். அதற்கு “நீங்கள் தான் வாங்கிக்கொடுங்களேன்!”—என்று உதவி சபாநாயகர் தமாஷாகக் கேட்டார்.

இதில் ‘தமாஷ்’ என்ன வேண்டி யிருக்கிறது? சிவசண்முகம் பிள்ளை இல்லாததால் காலி யாகியிருக்கும் சபாநாயகர் நாற்காலி உங்களுக்குத்தான் —என்று காமராசர் கண்ஜா டை காட்டியிருந்தால் சட்ட சபையே காபிக் கடலில் மூழ்கியிருக்குமே !

★

ராஜ்யப் புணருத்தாரணக் கமிட்டி தனி கேரள மாகாணம் வேண்டுமென்று சிபார்சு செய் யக் கூடுமென ஒரு வதந்தி உலவுகிறது.

அப்படி ஒரு புது மாகாணம் ஏற்பட்டால் தங்களுக்கே கவர்னர் பதவி தரவேண்டு மென்று கேட்டு, ஏராளமான ‘அப்ளிகேஷன்’கள் டில்லிக்குப் போயிருக்கின்றன வாம்!

★

# வேல் வீசினுர்கள் - விழி வீசுகிருர்கள் !

வணங்க மறுப்பவன் மீது முதலில் வேல் வீசுவதும்; பின்னர் அதுவும் தோல்வி அடைந்தால் விழி வீசுவதும் ஆரியம் கண்ட முறை; அழுகிப் போன பச்சை ஏகாதிபத் தியக் கொள்கை!

பாரத யுத்தத்தின் போது பொட்டைக் கண்ணனை திருதராஷ்டிரன் பீமனைத் தொலைத்துவிட எண்ணி, ஒரு முறையாவது அவனைக் கட்டித் தழுவி தன் அன்பைத் தெரிவிக்க ஆவல் படுவதாக அறிவித்தானும். திருதராஷ்டி ரனின் சூது தெரிந்த பாண்டவர், அந்தக் குருட்டுக் கிழவ னின் முன்னிலையில் பீமனைப் போல செய்த சிலையை நிற்க வைத்தார்களாம்.

திருதராஷ்டிரன் தழுவினுனும்! தழுவலா அது? பழி தீர்த்துக் கொள்ள அந்தக் காவலன் கையாண்ட வித்தை!

அவன் அணைத்தான்—பீமனின் உயிரை அணைத்து விடும் நோக்கத்தோடு! அவ்வளவுதான்! அவன் கட்டிப் பிடித்த வேகத்திலே சிலை தூள் தூளாகச் சிதறி விழுந்ததாம்!

அதே நிலையில்தான் இன்று வடவர்கள் நம்மைத் தழுவுகிருர்கள்!

ஜனுதிபதி ராஜேந்திரர் இனிமேல் ஆண்டொன்றுக்கு இரண்டு மாத காலத்தை தென்னுட்டிலேயே செலவிடப் போகிருராம்!

சுதந்தர தினத்தையோ, குடியரசு நாளையோ—இரண் டில் ஒன்றை விந்தியத்துக்கு அப்பாலேயே கொண்டாடு வதற்கு முடிவு செய்து விட்டாராம்!

ஹைதராபாத்திலே அவருக்கொரு மாளிகையாம்! ஆடம்பரங்கள் மிக்கதாம்!—காந்திய பக்தர் தென்னுட்டை நாங்கள் புறக்கணிக்கவில்லை என்று விளம்பரப் படுத்துவ தற்காக அதில் குடியேறப் போகிருராம்!

“நிலையம்” என்று அதற்கு நாமகரணமாம்! பெயர் சூட்டிவிட்டு அவர் குறிப்பிட்டாராம்:

“நிலையம்—என்ற சொல் இந்த தென்னுட்டின் எல்லா பகுதியினராலும், நான்கு மொழி பேசும் மக்களாலும் புரிந்து கொள்ளக் கூடிய ஒன்று என்று கூறக் கேட்டேன்”—என்று !

நிலையம்-என்ற பெயர் ‘நான்கு’ மொழிகளுக்கு பொது வாம்!-ஒப்புகிருர், ராஜேந்திரர்! அதன் மூலம் மறைத்து வைத்திருந்த ஒரு உண்மையையும் வெளிப்படுத்துகிருர்!

நிலையம் என்ற பெயர் மட்டுமோ ‘நான்கு மொழி’களுக் கும் பொது? நான்கு மொழிக்காரர்களாம் தமிழ்–தெலுங்கு மலையாளம்–கன்னடம் வழங்கும் இந்த நாடும் எங்களுக் குப் பொதுவானதுதான்! இந்த ‘நான்கு மொழிக்காரர்’ களின் நாகரிகமும் பொதுதான்! வரலாறும் பொதுதான்! வாழ்க்கை முறையும் பொதுதான்!—இவைகளை பொது வாக்கிக் காட்டும் கண்ணுடிதான் ‘திராவிடம்’ என்ற சொல்-‘திராவிடநாடு’ என்ற அமைப்பு!

ஏக இந்தியா பேசும் தோழர்களே! விழிவீசும் ஏகாதி பத்தியப் பித்தர்களே! ‘நிலையம்’ - என்ற சொல் கூறும் நிலைமை விளக்கத்தையும் உணருங்கள்!

# சிலம்பக் கூடம் செய்த வினை!

கடலூர், ஆக-28

தென்னுற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த மனக்குப்பம் கிராமத்தில், வடக்குத் தெருவிலே உள்ளவர்கள் குஸ்தி, சிலம்ப விளையாட்டு முதலியன பயில ஒரு சங்கம் அமைத்து நிதி திரட்டினுர்கள். அதற்கு நிதி தர தெற்குத் தெருவார் மறுத்தனராம். அதனுல் ஏற்பட்ட சண்டையில் ஒரு கொலை விழுந்தது. கொலை வழக்கில் சிலம்பக் கூடத்தினர் பெரும் பாலோருக்கு தண்டனை தரப்பட்டது. நால்வருக்குத் தூக்கும், 14 பேருக்கு கடுங்காவல் தண்டனையும் அளிக்கப்பட்டது. மனக்குப்பம் கிராமத்தில் சினிமா ஒழிப்பு சங்கத்தார் கூட்டம் போட்டு, “சினிமாவை விடு! சிலம்பை எடு!” என்று பிரசங்கம் செய்தால், ஊரார் வம்புக்கு வருவார்கள்; ‘போதுமய்யா சிலம்பை எடுத்து நாங்கள் பட்ட வேதனை’-யென்று!




“கவியின் கருத்துப்படி, வளம் நிறைந்த தாய் நாட்டுத் தெலுங்கு மக்கள்,வாழ்வுக்கு வகைதேட பிறந்த மண்ணை விட்டு அயல்நாடு சென்று அவதியுற்று அழும் கண்ணீர்த் துளிகள்தான், கடல் நீரை உப்பாக்கி விட்டன.”

“கூடாது! கூடாது! இந்த உரையாடல் கூடாது—உடனே நறுக்கிவிட வேண்டும்!” என்று உத்திரவு போடுகிறது சென்சார்!

மேலே கண்ட வசனத்திலே என்ன தவறு இருக்கிறதோ தெரியவில்லை! “தேயிலைத் தோட்டத்திலே!” என்ற பாட்டைப் பாடித் தேம்பி அழுதார்கள் நாடக மேடைகளில்! வெளிநாட்டிலே வேதனை எரிமலைகளாய்க் காட்சிதரும் ஏழைகளை சித்தரித்துக் காட்டி, கண்ணீர் சிந்த வைத்தார்கள் நாடகம் காண வந்தவர்களை! அதே நாடகக் கருத்துதான், தெலுங்கு “பராசக்தி”யிலே ஒரு வசனத்தின் வாயிலாகச் சொல்லப் படுகிறது—இது கூடாதாம்; கூவுகிறார்கள்—கூரை ஏறி நிற்பவர்கள்!

“வெளிநாட்டுத் தமிழர் வடிக்கும் கண்ணீர்தான் கடல் நீரை உப்பாக்கி விட்டது என்று அறிஞர் கூறியதுபோல!” என்ற கருத்துப்பட தமிழ் பராசக்தியிலே வசனம் இருக்கிறது. தெலுங்கிலே, ‘அறிஞர்’ என்ற சொல்லுக்குப் பதில் ‘கவி’ என்ற சொல் வருகிறது! இருந்தும், தமிழ் கண்ட கண்கள்; தமிழ் கேட்ட காதுகள்; தகாக் கருத்துடன் தணிக்கைப் பணியிலே இறங்கியிருக்கின்றன என்கிறபோதுதான், இது திட்டமிட்டு செய்கிற வேலையென்று நாம் முடிவு கட்ட வேண்டியிருக்கிறது.

தெலுங்கரோ, தமிழரோ, வெளிநாட்டிற்குப் பிழைப்பதற்காகப் போவது கிடையாதா? வெளிநாடுகளிலே தெலுங்கர் எவ்வளவு இழிவான தொழில்களில் ஈடுபட்டு வயிறு வளர்க்கிறார்கள்; எவ்வளவு கஷ்டப் படுகிறார்கள் என்பது தணிக்கைக்குழுவினர் அறியாத தகவலா?

**இலங்கை உறுமுகிறது!**

**மலேயா சீறுகிறது!**

அங்கெல்லாம் புழுக்களாய்—பூச்சிகளாய்—புழுதியிலே புரளும் பிராணிகளாய்—தென்னகத்து மக்கள் தேம்பி நிற்கிறார்கள். இதை வெளியே சொல்வதால் என்ன வெட்கம்! அப்படி வெட்கப் படுகிறவர்கள்; வேதனைப் புயலை அடக்க வழி காணட்டுமே—வேண்டாமென்றது யார்?

அமெரிக்காவிற்கோ, ரஷ்யாவிற்கோ, ‘பராசக்தி’ ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு அனுப்பப்படுமேயானால், அப்போது அவர்கள் பார்த்து நமது அரசாங்கத்தின் அழகை கேலி செய்யாமலிருக்க இந்த வசனத்தை வேண்டுமானால் வெட்டிவிடலாம். அதிலாவது சிறிது நியாயமுண்டு! அதைவிட்டு, “பிறந்த இடத்துப் பெருமையை உடன் பிறந்தாளிடம் பேசுவது” என்ற கேலிப் பழமொழிக்கு இலக்காக்கும் வகையிலே, நம்மிடமே, தணிக்கையாளர்கள் நடந்து கொள்வது தென்றல் வேடிக்கையாகத் தானிருக்கிறது!

**புரையோடிவிட்ட புண்!**

**அதிலே சீழ் வடிகிறது!**

**நாற்றம் மூக்கைத் துளைக்கிறது!**

“அய்யோ—புண் நாறுகிறதே” என்று சொல்லக் கூடாதாம்!

“ஆகா! புனுகுமணம் கமழ்கிறதே!” என்று பூரிப்படைய வேண்டுமாம்!

போதை தலைக்கேறியவன் கூட அப்படி உளறமாட்டான் புண்ணைப் ‘புண்’ என்றே கூறுவான்! ‘பொன்’ என்று புகழ மாட்டான்! ‘புனுகு’ என்று புலம்பவும் மாட்டான்! வேதனைக்கும், விசித்திரத்திற்கும் உரிய சென்சார் போர்டு மட்டுமே அத்தகைய உபதேசத்தைச் செய்கிறது! உத்திரவை நீட்டுகிறது!

குணசேகரன் சென்னையில் வந்து இறங்குகிறான். பிச்சைக்காரர்கள் சூழ்கிறார்கள்—“தமிழ் நாட்டு முதல் குரலே நல்லாயிருக்கே!” இது தமிழ்ப் பராசக்தியிலே!


அதைவிடக் குறைந்த வேகத்திலே தான் தெலுங்கு வசனம் அமைந்திருக்கிறது. அதாவது:

**“என் தாயகத்திற்கு நான் வரும்போது—ஆகா; எவ்வளவு அருமையான வரவேற்பு!”**

இந்த வசனமும் வெட்டப்பட வேண்டுமாம்! சென்னைத் தெருக்களிலே—புகை வண்டி நிலையங்களிலே—ஈக்கள் போல மொய்த்துக் கிடக்கும் பிச்சைக்காரர்களின் துயரத்தையும், சோகத்தையும் துடைத்து விட்டல்லவா, “ஆகா—பிச்சைக்காரரில்லாத இந்த நாட்டில் பிச்சைக்காரனைக் காட்டுகிறாயா; அனுமதிக்க மாட்டோம்” என்று உரத்த குரல் எழுப்பியிருக்க வேண்டும்! சென்சார் போர்டு அலுவலகம் இருக்கும் அடுக்குமாடி அரண்மனையிலிருந்து கால்வலி எடுக்கப் படிகளைக் கடந்து வந்து, காரில் ஏறி, ‘அப்பாடா’ என்று உட்காரும்போது, “கருணாமூர்த்தி! காசு போடு சாமி!” என்று காரைச் சுற்றி ஓடிவரும் காலற்ற, கையற்ற, பிழைக்க வகையற்ற, நாடோடிகளை—நடுத்தெரு நாராயணர்களை—தணிக்கைக் குழுத் தலைவர் நாள் தோறும் கண்டிருப்பாரே! கண்டிருக்க முடியுமே! அவரும் மனிதர்தானே—இருதயம் உள்ளவராயிற்றே! எத்தனையோ முறை தனக்குத் தானே அழுதிருப்பாரே; அந்த அனாதைகளைக் கண்டு! அந்த அழுதுரலைத் திரையிலே காட்டி “திக்கற்ற மக்களின் வாழ்விலே தித்திப்பை ஏற்படுத்த முயலுக” என்ற முழக்கத்தைக் கிளப்பினால்—“முடியாது! அந்தத் திரைப் படத்தையே மூளியாக்குகிறேன்!” என்று புறப்படுவதா?

தமிழகத்தை வாழ்விக்க வேண்டிய “புண்யவான்”களே! ‘தர்மம்’தானா இது? முறையா? கேட்பாரில்லையா? உதவியும் கிடையாது—ஒப்பாரியும் கூடாதா? கருணையும் பிறக்காது—கண்ணீரும்விடக்கூடாது எனக் கட்டளையா? யாரிடமய்யா, இந்த அநியாயத்தைச் சொல்லி அழுவது?

[தொடரும்]







**சிவகாமி பிக்சர்ஸ்**

❊ சிவகாமி பிக்சரார் தங்களது முதல் தயாரிப்பாக “மார்க் ஆப் சோரோ” என்ற ஆங்கிலக் கதையொன்றை படமெடுக்கத் திட்டமிட்டிருக்கின்றனர். “புதுமைப்பித்தன்” என்று பெயரிடப்பட்டிருக்கும் அப்படத்தை ராமண்ணா டைரக்ட் செய்யப் போகிறாராம்.

✱

**அண்ணா தலைமையில் மணிமகுடம்!**

❊ இலட்சிய நடிகர் ராஜேந்திரன் நாடக மன்றத்தார் சென்ற மாதம் முழுதும் தமிழ் நாட்டின் முக்கிய நகரங்களில் கொள்கை முழக்கம் செய்திருக்கின்றனர். அவர்களுடைய “மணிமகுடம்” நாடகத்திற்கு நாடெங்கும் நல்ல வரவேற்பு! கல்லக்குடி, திருச்சி, கரூர், சிங்கம்புணரி, மதுரை, ஆண்டிப்பட்டி, பரமக்குடி, கடலூர், ஆத்தூர்—ஆகிய இடங்களில் நாடகம் நடைபெற்றது.

மதுரையில் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை வகித்தார்கள். “...கருணாநிதியின் நாடகமென்றதால் புதுமை கருத்துக்களை எதிர்பார்த்தேன். நான் எள்ளளவும் ஏமாற்றம் அடையவில்லை; அவைகளுக்குக் குறைவில்லை; வரிக்கு வரி—எழுத்துக்கு எழுத்து கொள்கை வாடை வீசாமல் இல்லை!... ராஜேந்திரன், நாடகத்தில் புதுமைப்பித்தனாகத் தோன்றுகிறார். புதுமை நடைபோடும் வசனங்களை மெருகு குலையாது பேசுகிறார், ‘கணீர் கணீர்’ என்று! இத்தகைய இலட்சியக் காளைகளை நம்பியிருக்கும் இயக்கத்துக்கும், இயக்கத்தையே நம்பியிருக்கும் நாட்டுக்கும், மணிமகுடம் மகத்தான தொண்டு! எனக்கு ஒருபுது நம்பிக்கையே தோன்றுகிறது” என்று நாடகத்தைப் போற்றினார்.

✱


**மாநில மாநாட்டு நிதிக்காக**

**4-9-55 ஞாயிறு**

மாலை 6-மணிக்கு

சென்னை கோகலே மன்றத்தில்

பன்மொழிப் புலவர்:

**கா. அப்பாதுரை**

எம். ஏ., எல். டி.

அவர்கள் தலைமையில்

**மு. கருணாநிதி**

சொற்பொழிவாற்றுவார்.

நன்கொடை: : ரு 1, அணா 8.

—சென்னை மாவட்ட தி. மு. க.

# பதவிப் பழம்!

...று குழந்தை அழுதால் ...ழைப் பழம்'!

—இது பழமொழி!

அரசியலில் பெரும் புள்ளிகள் ...தால் 'பதவிப் பழம்'!

—இது புதுமொழி!

ஆந்திர கேசரி பிரகாசம் வயது ...நிர்ந்த பழமாகிவிட்டாலும் பத...ப் பழத்திலே அவருக்குள்ள ...யம் மட்டும் போகவில்லை!

அவர் தெலுங்கு நாட்டின் ஆச்...ரியார் — மக்களால் அரசியலி...ருந்து அப்புறப்படுத்தப்பட்ட...ர்!

அவருக்குத்தான் இப்போது ...பகாரச் சம்பளமாக மாதம் ...ன்றிற்கு 750 ரூபாய் தரப்போகி...களாம்—காங்கிரஸ் கட்சியினர்!




...வாழ்நாளை கட்சிப் பணிக்காக ...ப்பணித்துவிட்டு, சொந்த ...ழ்க்கையை வளப்படுத்திக் ...ாள்ள நேரமில்லாதவர்களுக்கு ...பகாரச் சம்பளம் கொடுத்தால் ...தன் பொருளை நம்மால் புரிந்து ...ாள்ள முடியும்!

...ிரகாசம் பல தியாகத் தழும்பு...ப் பெற்றவர்தான்; வெள்ளை ...றியர்கள் தந்த குண்டாந்தடி...ளுக்கு வீரத்துடன் மார்பு காட்...ய உத்தமர்தான்—ஆனல் அதே ...யடிகளை, துப்பாக்கித் தோட்...ாக்களை, நாட்டு மக்களிடமும் ...ன் ஆட்சிக் காலத்திலே திருப்...த் தந்திருக்கிறர் என்பதை ...ாரும் மறுக்கமுடியாது!

...திறமை மிக்கவர்கள் பலர் ...ருக்கும்போது தன் மகனுக்கு ...சகரட்டிரி பதவி தந்து, ஆந்திர ...க்களின் வெறுப்புக்குப் பாத்திர...னவர்—இதுவும் மறுக்க முடி...ாத உண்மை!

பிரகாசத்துக்கு மாதம் 750 ரூபாய்கள்! இது அவரது தியாகத்துக்கும், தொண்டிற்கும் தரப்படும் சன்மானமல்ல!

—உட்பொருள் உணர்ந்தவர்களுக்கு இதன் உண்மை புலப்படும்!

சென்ற தேர்தலிலே காங்கிரசுக்கு மெஜாரிட்டி கிடைத்ததும், 'கோபால ரெட்டி அண்டு சஞ்சீவி ரெட்டி கம்பெனி'யார் அவரை வீட்டிற்கு அனுப்பிவிட்டார்கள்.

எப்படியும் பதவி நாற்காலியில் உட்கார்ந்துவிட வேண்டுமென்று கனவு கண்டார்; அந்த இலட்சியத்தைப் பல தடவைகளில் அவர் வெளியிட்டு ஆதரவு தேடவும் முயன்ருர்!

அந்தோ பரிதாபம்! அவர் எண்ணக் கோட்டையை இடித்துத் தள்ளிவிட்டார் கோபால ரெட்டியார்!

கள்வெறியையும், காமவெறியையும்விடக் கொடுமை வாய்ந்ததாயிற்றே பதவிவெறி!

"எப்படியும் நான் ஆந்திர மாகாணத்தின் பிரதமராகிவிட வேண்டும்—சமயத்தை எதிர்பார்த்திருக்கிறேன்"—இப்படியாக அவரது உள்ளம் குமுறியது!

பிரகாசம் பல சமயங்களில் வெளவாலாக இருந்த போதிலும்-தன் வயதாலும், பழைய தியாகத்தாலும் மக்கள் மனதைக் கவர்ந்துவிடும் வித்தை பயின்றவர்!

மீண்டும் பதவிப் போரிலே குதிப்பாரோ; தங்கள் நிலையை தகர்ப்பாரோ—என்ற பீதி கோபால — சஞ்சிவி ரெட்டிகளைப் பிடித்துக் கொண்டது!

அதன் பயன்தான் 750 ரூபாய்கள்!

"நீர் அரசியற் பணியிலிருந்து 'ரிட்டையர்' ஆகிவிட்டீர்; இனி ஓய்வுபெற வேண்டியதுதான் உமது வேலை"—என்கிற அறிவிப்புதான் அந்த 750 ரூபாய்கள்!

தொண்டிற்காகத் தரப்படும் பாராட்டு அல்ல; தொல்லைகொடுக்காமல் இருக்கவேண்டுமென்பதற்கான அணைதான் அந்த 750 ரூபய்கள்! பிரகாசத்தின் ஆசைகளுக்குப் போடப்பட்ட தடைதான் அந்த 750 ரூபாய்கள்!

—இதுதான் உபகாரச் சம்பளத்துக்குள்ளே புதைந்து கிடக்கும் உண்மை விளக்கம்!

★


சென்னை, செயிண்ட் மேரிஸ் மண்டபத்தில்
6—9—55 செவ்வாய் மாலை 6-30 மணிக்கு
அறிஞர் அண்ணா தலைமையில்
இலட்சிய நடிகர் ராஜேந்திரன் குழுவினர் நடிக்கும்
(மு. க.வின்)
மணிமகுடம்
(நாடகம்)
மற்ற நடிகர்கள் :
நடிகமணி நாராயணசாமி, எம். என். கிருஷ்ணன்,
பி. எஸ். வெங்கடாசலம்.
டிக்கெட் விபரம்:— ரூ. 10, 3, 2, 1.



செப்டம்பர் இதழ் விற்பனையாகிறது!
★ "மலர்" ★
[இலக்கிய மாத இதழ்]
ஆசிரியர் : வே. கபிலன்.
நிர்வாக ஆசிரியர் : ஜி. ஜெயராமன்.
செப்டம்பர் இதழ்,
மு. கருணாநிதி, கி. ஆ. பெ. விசுவநாதம்—ஆகியோரின்
வாழ்த்துகளுடன், டாக்டர் மு. வரதராசன், பேராசிரியர்
க. அன்பழகன், சி. பி. சிற்றரசு, சொர்ணம்,
எல்லார்வி, கௌந்தி—ஆகியோரின்
எழுத்தோவியங்களுடனும் மலர்ந்திருக்கிறது.
தனிப் பிரதி 4-அணு
முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள்
நாடெங்கும் தேவை.
"மலர்", தபால் பெட்டி எண். 1868, சென்னை-1.


## வருந்துகிறேம்.

திருவாரூர் தி. மு. கழகத் தோழர் திரு பெ. சேதுபதி, ஆசிரியர் சதாசிவம் ஆகியோரின் தந்தையார் திரு. பெரியசாமி (தஞ்சராயர்) அவர்கள் இயற்கை எய்திய செய்தி கேட்டு வருந்துகிறேம். தந்தையைப் பிரிந்து வாடும் தோழர்கள் இருவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்!

சுயமரியாதை இயக்கத்தில் நீண்ட நாள் பற்று கொண்டவரும், சென்னை-கோமளீசுவரன்பேட்டையில் தி. மு. கழகத்தை அமைத்தவருமான தோழர் எம். எஸ். முகமது மொய்தீன் அவர்கள், 22-8-55 அன்று இயற்கை எய்தியது குறித்து மிகவும் வருந்துகிறேம்.

### திருத்திக் கொள்க.

இந்த இதழ் 8-ம் பக்கத்தில் 'யூகங்கள்' என்ற தலைப்பில் வந்துள்ள கட்டுரையில் கீழ்க் கண்டவாறு திருத்திக் கொள்க:

...கோவா ஆசியாக் கண்டத்தில் இருப்பதையும், உகண்டா ஆப்பிரிக்காக் கண்டத்தில் இருப்பதையும் சுட்டிக் காட்டினேம்.

## ★ மகாபாரதம் - [தொடர் சித்திரம்] - 16 ★



# பிறை வானம்



பிள்ளைகள் பகுதி...

# தீ

★— சிறு கதை —★

'தபால்' என்ற குரல் எழும்பியது. தங்கை தாவிச் சென்றது வாசலுக்கு.

தபால்காரத் தாத்தா வாராந்திர சிறுவர் பத்திரிகை ஒன்றை வீசி எறிந்துவிட்டு, பக்கத்து வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தார்.

பத்திரிகையைக் கையில் எடுத்தது தங்கை. அவசர அவசரமாகப் புரட்டியது. பக்கங்கள் ஒவ்வொன்றும் சுவைக்க வில்லையோ என்னவோ, உதட்டைப் பிதுக்கியது. உள்ளே நுழைந்தது. மேஜையின் மேல் வைத்தது.

"என்னம்மா; கீழே வைத்து விட்டாய்? பத்திரிகை வந்தவுடன் போட்டி போட்டுக்கொண்டு படிப்பாயே..."—பக்கத்தில் வந்த அண்ணன் இப்படிக் கேட்டு வைத்தார்.

"ஆமாம் அண்ணா! அப்படித்தான் படிப்பேன். ஆனால், இப்போதெல்லாம் நான் எதிர்பார்ப்பது இந்தப் பத்திரிகையில் காணுவதில்லை. தம்பி தங்கைகளுக்கான தங்கப் பரிசாக — நாட்டின் நிலை விளக்கும் நல்ல எழுத்துக்களை — சுவையாக-கருத்துள்ள கதையாக ஒரு பையன் எழுதிக்கொண்டு வந்தான் முன்பெல்லாம். இப்போது இரண்டொரு மாதமாக அந்தப் பொன் எழுத்துக்களை காணவே முடிவதில்லை."—தங்கை பதில் சொல்லிற்று.

"அந்தப் பையனின் பெயர்?..."

"தெரிந்திருக்குமே அண்ணா உங்களுக்கும்; அன்பன் என்று பெயர்! அவன் கதைகள் எப்படிப்பட்டவை தெரியுமா? ஏழைத் தம்பிகளைப் பற்றி எழுதுவான்—மாளிகை வாசிகளை தூக்கில்தான் போடவேண்டும் என்ற எண்ணம் தானே பிறக்கும்! ரிக்ஷாக்காரர்களைப் பற்றி எழுதுவான் — கண்கள் குளமாகி விடும்! தீண்டாமையைக் காட்டுவான் — 'பள்ளன்; பறையன்' என்று சொல்லித் திரிவோரின் திமிர் என்று அடங்கும்?— என்ற ஏக்கம் பிறக்கும், உடனே! அப்பப்பா! எத்தனை சத்தான எழுத்துக்கள்! பாவம், அவன் பரம ஏழையாக இருக்கவேண்டும்—பசி, பட்டினியால் வாடுபவனாகத்தான் இருக்க வேண்டும்!"— வழக்கம்போல் நிறுத்தாமல் பேசிய தங்கை, துக்கம் தொண்டையை அடைத்ததால் இத்துடன் நிறுத்தியது.

"தவறு தங்கையே!..." என்றார் அண்ணா 'சடக்'கென்று. ஒரு பெருமூச்சு பின் தொடர்ந்தது.

"என்ன அண்ணா, தவறு?"

"அன்பனை ஏழை என்றாயே; பசியால் வாடுபவன் என்றாயே; அந்தக் கற்பனைதான் தவறு!"

"ஏன் அண்ணா? அவனை உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும்! என் வகுப்பில் படித்தவன்தானே அவன்!...ஆனால்... இன்று அவன் இல்லாமல் வகுப்பே வெறிச் சென்றிருக்கிறது..."

"புரியும்படிச் சொல் அண்ணா"—தங்கை துடித்தது ஆவலுடன்.

"சொல்லுகிறேன்: அந்த நல்ல தம்பியின் கதையும் ஒரு கதை போலத்தான் இருக்கும்.

"கேள் தங்கையே: அன்பனை ஏழை என்று எண்ணினாயே— அவன் ஏழையல்ல; ஒரு பணக்காரரின் மகன்தான். ஆனால், அவனிடம் மாளிகைத் திமிர் கிடையவே கிடையாது. இரக்கம் இருந்தது. அன்பு, ஆதரவு—நீதி, நேர்மை— இவை எப்படித்தான் அவன் இரத்தத்தில் பதிந்ததோ; பெரிய ஆச்சரியமே! அவன் நடவடிக்கை குறித்து வியக்காதவரே இல்லை. கற்பனைகூட செய்ய முடியாதல்லவா, ஒரு சீமான் மகன் தனக்கென்று வாங்கிய மோட்டாரை வெறுத்து—ரிக்ஷாவை ஒதுக்கி— நடந்தே பள்ளிக்கு வருவான் என்று! அன்பன் ஊராருக்கு— ஏன், உலகத்துக்கே புதியவனாகத் தோன்றினான்.

"தன்னைப் போன்ற பணக்காரச் சிறுவர்களை அவன் வெறுத்தான். ஏழைச் சிறுவர்களோடு பழகினான். அவனுடன் பேசுவதற்கே பயந்தனர் சிலர். ஆனால், அவனோ... அந்தச் சிறுவர்களிடையே வலியச் சென்று பேசினான். வசதிகள் பல செய்து தந்தான்."

"இதை எல்லாம் அவனது அப்பா அனுமதித்தாரா அண்ணா?"

"இது என்ன கேள்வி தங்கையே! எப்படி அனுமதிப்பார்? மகனை எவ்வளவோ கண்டித்தார். அன்புச் சொற்கள் — அதட்டல் கட்டளைகள் எதுவுமே பலன் தரவில்லை. அப்போதுதான் அன்பன் கதைகளும் எழுத ஆரம்பித்தான். அவனும் மாடனும் பள்ளி இடை நேரத்தில் கூட எழுதுவார்கள்."

"மாடனா?... அது யார்?..."

"ஓகோ, சொல்லவில்லையா! மாடன்தான் அன்பனின் உயிர் நண்பன். குடிசைவாசி. ஏழையிலும் ஏழை. அவன் குடிசை, அன்பனின் மாளிகைக்குப் பக்கத்திலேயே இருந்தது. இருவரும் நண்பர்களானதில் வியப்பில்லையே!

"மாடன்தான் அன்பனை 'எழுது: எழுது' என்று தூண்டுவானாம். அன்பன் எழுதினான். நிறைய எழுதினான். நீயேதான் சொன்னாயே, அவன் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஏழைகளுக்காக அழுதன. வழக்காடின. இனியும் பொறுப்பாரா தந்தை? கெடுபிடிகள் அதிகமாயின. ஒரு நாள்..."

"என்ன அண்ணா செய்தார்?"

"ஏன் அவசரப் படுகிறாய்? ஒரு நாள் மாடனைக் கூப்பிட்டார். 'என் மகனுடன் சேராதே' என்று கண்டித்தார். அடிக்கவும் செய்தார். இதை அறிந்த அன்பன் சும்மா இருப்பானா? அப்பாவிடம் சண்டைக்கே போய்விட்டானாம். பாவம், அவனுக்கு எப்படித் தெரியும், பின்னால் நடக்க இருந்தது?

"அன்பன் நிறைய படித்தான்; நிறைய எழுதினான்; எழுதி எழுதிக் குவித்தான். அந்த எழுத்துக்கள் பெரிய பயங்கரத்தைச் சுமந்து கொண்டே வளர்ந்தன"

"பயங்கரமா? என்ன அண்ணா புதிர்?..."

"புதிரல்ல தங்கையே! பயங்கரமேதான். துணிவுடன் கேள். அப்பா 'எழுதாதே' என்று கண்டித்தார். அடித்தார். அன்பனா சளைப்பவன்? எதிர்த்துப் பேசினான். 'எழுதத்தான் செய்வேன்' என்று வாதிட்டான். எழுத்துக்களால்—கதைகளால் நிரம்பியிருந்த பெட்டி ஒன்றை வீசி தெருவில் எறிந்தார், அந்த கோபக்கார மனிதர்!

"அப்போதே அந்தப் பெட்டி மாடனின் குடிசைக்குள் குடியேறியது. இதை அறிந்த அப்பா துடித்தார். கோபத்தால் தாண்டிக் குதித்தார். ஏதோ முடிவு செய்தார். "அத்தனை திமிரா?" என்று அலறினார்.

"சொல்லச் சொல்ல—கெஞ்சக் கெஞ்சக் கேட்காத மகனை நினைத்ததும் அவருக்கு கோபம்தான் தலைதூக்கியது. கோபத்தின் முன்னே பாசம் எங்கேயோ ஓடி ஒளிந்துகொண்டது.

"அன்று இரவு—நடுநிசி இருக்கும்! திடீரென்று மாடனின் குடிசை தீப்பற்றி எரிந்தது. ஊர் கூடியது; தீயை அணைக்க அரும்பாடுபட்டது. நீ படித்திருப்பாயே, நீரோ என்ற ரோம் மன்னனுக்கு தீயைப் பற்றி பாட்டுப்பாட ஆசை பிறந்ததாம்; ஆகவே ரோமுக்கே தீயிடச் செய்தானாம்; அந்த பயங்கரத் தீயை ரசித்துக் கொண்டே—மக்களின் அலறல் பதறலுக்கிடையே அவனது பிடில் ஒலித்ததாம்; கீதம் எழுந்ததாம்! அப்படித்தான் மாடனின் குடிசை தீப் பற்றி எரிவதை தன் வீட்டு மாடியில் நின்று ரசித்துக் கொண்டிருந்தார் அந்த பணக்காரர். அவர் உதடுகள் அசைந்தன. பாடவில்லை: ஏதோ முணு முணுத்தார். 'கதை எழுதுகிறானாம் கதை—எல்லாம் சாம்பல்!' என்று பேசினார்."

"அவர்தானா அண்ணா தீயிட்டது?"

"கேள் இன்னும்... தீ அணையவில்லை. அப்போதுதான் எங்கிருந்தோ ஒரு சிறுவன் ஓடி வந்தான். குடிசைக்குள் பாய்ந்து ஓடினான். ஒரு பையனை தூக்கிக் கொண்டு வெளியே வந்தான். மாடியிலே நின்ற அப்பா உற்று நோக்கினார். 'சரிதான்: தீர்ந்தான் மாடனும். ஒற்றைக் கல்—இரட்டைக் கனி' இப்படிக் களித்தார். செல்வச் சீமானல்லவா. அவருக்கு ஒரு ஏழையின் மரணம் மகிழ்ச்சியைத் தந்ததில் என்ன விந்தை!..."

"ஐயையோ! மாடன் செத்து விட்டானா அண்ணா...?"

"இல்லை; இன்னும் கேள். தீயில் வெந்துபோன பையனைத் தூக்கி வந்த சிறுவன் நடந்து கொண்டேயிருந்தான். நேராக மாளிகையை நோக்கி வந்தான். அப்பா திடுக்கிட்டார். 'அவன் ஏன் என் வீட்டுக்கு வருகிறான்?' — இப்படித் துடித்தார். அவர் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

"மாடியிலிருந்து கீழே இறங்கி ஓடி வந்தார். "யாரது? என்ன இங்கே?" என்று கத்தினார். கையில், தீயில் சிக்கிய பையனுடலைத் தாங்கி நின்ற சிறுவனை கவனித்தார். மாடன்! 'ஆ' என்று அலறினார் அப்பா. அவன் கையிலிருந்த உருவத்தை நோக்கினார். தீயில் கருகி அடையாளம் தெரியாது போன அந்த உருவத்தை கவனித்தார். "ஐயோ மகனே!" என்று அலறினார். 'அப்பா' என்று அழைக்க அன்பன் அங்கில்லை; ஆமாம்; பிணம் பேசவில்லை!

"ஏழையைச் சிரிக்க வைக்கலாம்; கோழையை வீரனாக்கலாம்; சமுதாயத்தின் அடித்தளத்தில் உருண்டுகொண்டிருக்கும் தாழ்த்தப்பட்டோரை "நான் யார்? என் நிறமை எத்தகையது?" என்ற சுய உணர்வுக்கு இழுத்துச் செல்லலாம்; அதற்கு என் எழுத்துக்களும் பயன்படலாம்; — என்ற ஆசையால்-வெறியால் எழுதினான் அன்பன். அவன் எண்ணத்தை சிதைக்க — எழுத்துக்களைப் பொசுக்க — அந்த யோசனையற்ற அப்பா குறுக்கு வழி கையாண்டார். பாவம், குரலெடுத்துக் கத்தினார். 'குய்யோ; முறையோ' என்று அலறினார்."

"அப்புறம்...?"

"போலீசார் மாடனைக் கைது செய்தார்கள். ஆனால் உடனே விடுதலையும் அடைந்தான்."

"எப்படி?..."

"பைத்தியம் பிடித்து திரிந்து கொண்டிருந்த அன்பனின் அப்பா, வழக்கு மன்றத்தில் — "என் மகனைக் கொன்றவன் நானே!" என்ற உண்மையைச் சொல்லி விட்டார். அன்று மட்டுமல்ல; இன்னும் அவர் இப்படியே புலம்பிக் கொண்டிருக்கிறார்."

"ஆமாம் அண்ணா; மாடனின் குடிசைக்கு ஏன் போனான் அன்பன்?

"வீட்டில் கதை எழுதினால் தந்தை சீறுகிறாரே என்று எண்ணினான். ஆகவேதான் கதை எழுத அந்தக் குடிசையைத் தேர்ந்தெடுத்தான் அன்பன். பாவம், அப்பாவின் கோபம், தீயின் உருவிலே வந்து உயிரையே குடித்து விட்டது... இதை எல்லாம் மாடன், என்னிடம் கதைகதையாகச் சொன்னான்..."

அண்ணா கதையை முடித்தார். 'இனி அன்பனின் கதைகளை என்றுமே படிக்க முடியாது' என்ற ஏக்கம் மேலிட தங்கை எழுந்து நடந்தது.

—சொர்ணம்

# 'எழுத்தாணி'

எம். ஆர். தாரா; பழங்காநத்தம்.

(?) காதற் கடலைத் தாண்டி கரை சேர்ந்த காதலர் காணும் காட்சி யாது?

குழந்தை குட்டிகள் என்ற மணற் பரப்பு!

வீ. சிவானந்தம்; புள்ளிலயன்.

(?) ஒரு நாகரீகப் பெண், ஒரு அநாகரீக மனிதனை மணக்க நேர்ந்தால் அவள் வாழ்வு எந்த முறையில் அமைய வேண்டும்?

நாதனையும் நாகரீக உலகு நோக்கி நடந்திடச் செய்யும் 'நடை வண்டி'யாக அமைய வேண்டும்.

ப. கோவிந்தசாமி; தில்லையம்பூர்.

(?) பணமில்லாதவன் பிணம்! குணமில்லாதவன்?...

நடைப் பிணம்!

(?) விநோபாஜீயின் பூதானம் வெற்றி பெறுமா?

விநோபாவினால் ஐந்து கோடி ஏக்கர்-அதாவது இந்தியாவின் மொத்த நிலத்தில் ⅙ பங்கு பூதானமாகப் பெற திட்டம் தீட்டப்பட்டது. பூதான இயக்கம் துவக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. இதுவரை 40 லட்சம் ஏக்கர்தான்—அதாவது திட்டமிடப் பட்டதில் பன்னிரெண்டரையில் ஒரு பாகம்தான் கிடைத்திருக்கிறது; அதுவும் பயனற்ற நிலங்களாக! வெற்றியா தோல்வியா என்பதை தாங்களே முடிவு கட்டிக் கொள்ளுங்கள்!

எம். ஜெகநாதன்; நாக்கியா பாளையம்.

(?) இராமன் மதுவருந்தியதற்கு என்ன ஆதாரமிருக்கிறது?

வால்மீகி ராமாயணம்தான் ஆதாரம்!

என். பி. ராமன்; கோசப் பாளையம்.

(?) உண்மை மறையுமிடமும், பொய் மலருமிடமும் எவை?

பொய் மலருமிடத்தில் உண்மை மறைகிறது. உண்மை மறையுமிடத்தில் பொய் மலருகிறது!

போ. நரசிம்மன்; பாண்டேஸ்வரம்.

(?) நான் தி. மு. க.—என் வாழ்க்கைத் துணைவி கம்யூனிஸ்ட்—

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்:
(●) தி. கண்ணப்பன்,
புங்கம் பாளையம்,
மருதூர் (அஞ்சல்)
(கோவை மாவட்டம்)

எங்களுக்குப் பிறக்கும் குழந்தை காங்கிரசாக இருந்தால்...?

'பிள்ளை வளர்க்கத் தெரியாத பெற்றோர்கள்' என்று உங்களுக்குப் பட்டம் கிடைக்கும்.

ஏ. மயிலன்; தோட்டம்பாளையம், வேலூர்.

(?) வெற்றிடம் (Vaccum Place) மின்சார பல்பைத் தவிர வேறு எங்கு உள்ளது?

அந்த மின்சார பல்பு எரிய ஆரம்பித்ததும் கை எடுத்துக் கும்பிடுகிறார்களே; அவர்கள் தலையில் உள்ளது!

இரா. கலியாணசுந்தரன்: வலங்கைமான்.

(?) விபச்சார தடைச் சட்டம் கொண்டு வந்த அரசினர், விபச்சாரத்தையே மூலக் கருத்தெனக் கொண்ட 'மகா பாரதம்' போன்ற இதிகாசங்களுக்குத் தடை விதிக்காதது ஏன்?

தடை விதிப்பதா? அதை அவர்கள் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடாமல் இருந்தால் போதாதா!

வி. கே. தென்னரசு; ஆரப்பாளையம், மதுரை.

(?) நாம் ஏன் பிறந்தோம்?

'சாக' என்பார்கள் சமயவாதிகள்! இல்லை; சரித்திரத்திலே இடம் பெற!

தே. ப. கிந்தனார்; தி. ம. கோட்டை.

(?) இந்தியாவில் ஆச்சாரியாரின் அன்புக்குரியவர்கள் யார்?

இப்போதைக்கு பட்டம் தாணு- பிரகாசம்-முகம்மதலி என்று பட்டியல் [illegible]

வேலவன்; மானாமதுரை.

(?) பி. சி. ஜி. உயிரளிக்கக்கூடியதா? உயிர் அழிக்கக்கூடியதா?

ஆச்சாரியாரைப் பொறுத்த வரையிலே அவருக்கு பி. சி. ஜி. தான் 'உயிர் அளித்து' வருகிறது.

ஏ. பாலன்; தருமபுரி.

(?) நேருவை வெளிநாட்டார் அனைவரும் வரவேற்றுப் புகழும்போது நாம் மட்டும் அலட்சியப் படுத்துகிறோமே; ஏன்?

மாதா வயிறு எரிய மகேஸ்வர பூஜை செய்பவர்களை யார்தான் அலட்சியப்படுத்தமாட்டார்கள்!

(●) தி. கண்ணப்பன்; மருதூர்.

[?] அதிக செலவில் நடைபெறும் பயன் தராத பணி எது?

திராவிடர் இயக்கத்தை ஒழித்துக் கட்ட நடைபெறும் முயற்சி!

மு. நாச்சிமுத்து; வடுகப்பாளையம்.

[?] அண்ணாத்துரை, ரோம் நாட்டு வீரர்களைப் பற்றி எழுதாமல்—ரோமாபுரி ராணிகளின் லீலைகளைப் பற்றி எழுதலாமா?

ஒரு மாபெரும் சாம்ராஜ்யம், சரசிகளால் கவிழ்ந்துவிட்ட சோகக் கதையை எடுத்துக்காட்டி, வீரர்களுக்கு எச்சரிக்கை செய்ய எழுதப்பட்டதுதான் 'ரோமாபுரி ராணிகள்' என்ற புத்தகமே தவிர, பாஞ்சாலியைப் பத்தினி என்று கூறும் மகாபாரதமல்ல அது என்பதை உணர வேண்டுகிறேன்.

சு. குருசாமி; பழங்காநத்தம்

[?] திராவிட நாடு வந்தவுடன், இங்குள்ள ஆரியர், வடநாட்டார் ஆகியோர் துரத்தப்படுவார்களா? அல்லது திராவிட நாட்டில் வாழ அனுமதிக்கப்படுவார்களா?

ஆரியக் கொள்கையைக் கை கழுவிவிட்டு—ஆரியர் மனிதர்களாக மாறிவிட்டால், திராவிட நாட்டில் சுகமாக வாழ அனுமதிக்கப் படுவார்கள். வடநாட்டுக்காரர்களும், 'வேற்று நாட்டா'ருக்கு எத்தகைய சலுகைகளையும் வசதிகளையும் திராவிட அரசு வழங்குகிறதோ, அவைகளை மட்டுமே பெற்று திராவிடத்தில் வாழலாம்.

பி. எம். ரஹீம்; மூணார்.

[?] கடவுளைப் படைத்தது யார்?

மனிதன்!

க. ரங்கபாசியம்; மயிலை.

[?] "சட்டத்தை மீறுவதாக அரசாங்கம் நினைத்தால் சிறைக்குத் தள்ளத்தான் முடியுமே தவிர, அவர்களை [நிராயுதபாணிகளை] சுட்டுக் கொல்வது உலக சட்டத்திற்கே விரோதமானது"—இப்படிக் கூறியவர் எந்த நேரு?

கல்லக்குடியிலும்—தூத்துக்குடியிலும் பிணக்காடு உண்டாக்கி, பாட்னாவிலும் பம்பாயிலும் சவமலைகள் தோற்றுவித்த சாட்சாத் பண்டித ஜவஹர்லால் நேருவேதான்!

சந்திரகுப்தன்; பெங்களூர்.

[?] கம்யூனிஸ்டுகள் நேருவைத் துதிபாட ஆரம்பித்திருக்கிறார்களே; ஏன்?

அவர்களுடைய 'திவ்ய க்ஷேத்திர'மான ரஷ்யாவுக்கு போய்த் திரும்பியவரல்லவா நேரு—அதனால்தான்! யார் கண்டது; திரை மறைவிலே இன்னும் எத்தனை எத்தனை திட்டங்களோ?

வீ. குருசாமி; சத்திரப்பட்டி.

[?] கலைக்கும், தி. மு. க. வுக்கும் உள்ள தொடர்பு என்ன?

நூற்றுக்கு எண்பது பேர் என்ற அளவில் கல்வியறிவற்றோர் மலிந்துகிடக்கும் நம் நாட்டில், அவர்களுக்கு அறிவு விளக்கம் தர கலையை தி. மு. க. பயன்படுத்துகிறது. புதுமை எண்ணங்களும், மறுமலர்ச்சிக் கருத்துகளும் இன்று பெருமளவு மக்கள் மன்றத்தால் வரவேற்கப் படுவதற்கு இந்த முயற்சியே காரணம்!

ப. ஆறுமுகம்; திருவாரூர்.
பெ. கணேசன்; காரைக்குடி.

[?] வருகிற நகர மன்றத் தேர்தலில் காங்கிரஸ் என்ற போர்வையில் புகுந்து கொண்டிருப்போரை என்ன செய்வது?

கவலை எதற்கு? உங்கள் கையில் இருக்குமே ஓட்டு; அதைக் கொண்டு ஓட்டி விடலாமே, அத்தகையோரை!


## தேவை

நமது "முரசொலி" பத்திரிகைக்கு விளம்பரம் சேகரிக்க, திறமையும், அனுபவமும் உள்ள ஏஜண்டுகள் தமிழ்நாட்டில் ஒவ்வொரு முக்கிய நகரிலும், ஊரிலும் தேவை. 25 சதவிகிதம் கமிஷன் தரப்படும்.

விபரங்களுக்கு:-
"முரசொலி"
4-128, மவுண்ட் ரோடு,
சென்னை-6.



## 'முரசொலி'

இலங்கைத் தோழர்களுக்கு:

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 6-0-0 |
| 6-மாத சந்தா | 3-8-0 |

இலங்கை நேயர்களிடமிருந்து வி. பி. பி. மூலம் சந்தா தொகை பெற்றுக் கொள்ள இயலும்.

வெளிநாடு

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | 7-0-0 |
| ஆறுமாத சந்தா | 4-0-0 |

மலேயா நேயர்கள், சந்தா தொகைக்கு 'கிராஸ்' செய்த பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் அனுப்ப வேண்டுகிறோம்.

மூன்று மாத சந்தா கிடையாது.


ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி. 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6.